தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

31/10/90

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 64 மலர் 5

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2021

துணர் : 64 பிரமோதூத — ஆவணி மலர் : 5

ஆகஸ்ட் — செப்டம்பர் — 1990

உள்ளுறை பக்கம்

1. **தொல்காப்பியரின் சொற்பொருட் சிந்தனைகள்** 194
முனைவர் பெ. மாதையன்

2. **மக்கள் பாடல்களில் மருத்துவம்** 210
டாக்டர். மா. மீனாட்சி சுந்தரம்

3. **கல்லா — ஒரு பார்வை** 212
கே. பழனிவேலு

4. **மூதறிஞர் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகரின் வாழ்க்கைக் குறிப்புகள்** 219
வி. சா. பாலசுப்ரமணியன்

5. **ஓசை ஒலியெலாம் ....** ... 225
பேராசிரியர், வீ. அ. இளவழகன், எம்எஃசி., எம்ஃபில்.,
(சென்ற இதழ் தொடர்ச்சி)

6. **அறுவகை இலக்கணத்தில் எழுத்திலக்கணக் கோட்பாடுகள்** 233
டாக்டர். சா. கிருட்டிணமூர்த்தி

7. **திருவிடைமருதூர்க் கலம்பகம் ஓர் ஆய்வு** 235
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
இரா. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., எம்ஃபில்.,

பதிப்பாசிரியர்: பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப். கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ். டி. காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
முன்னாள் செயலாளர், தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை,
சென்னை.

,, சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச்.டி
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.

,, முனைவர் சி. பாலசுப்பிரமணியன், எம் ஏ எம்.லிட், பிஎச்.டி
துணை வேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச்டி.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மு. கோவிந்தராஜன்
பேராசிரியர், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மா. இராமலிங்கம், எம். ஏ., பி எச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்

,, தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை, பி ஏ.,
முன்னாள் அரசு துணைச் செயலாளர் சென்னை.

,, முனைவர் ஈரோடு தமிழன்பன், எம். ஏ., பி எச்.டி.,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம் ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

T 4743

,, புலவர். செ. இராசு எம். ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சை.

,, புலவர் ஆ. பாலன், எம்.ஏ., எம். ஃபில்
துணைமுதல்வர் த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., பி. எட்.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவர மேனிலைப்பள்ளி

,, முனைவர் பா. மதிவாணன், எம் ஏ., எம். ஃபில்., பிஎச்.டி.,
தமிழ் விரிவுரையாளர், த. உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

தொல்காப்பியரின் சொற்பொருட் சிந்தனைகள்

முனைவர் பெ. மாதையன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

முன்னுரை

தொல்காப்பியச் சொல்லதிகாரம் வெறுமனே சொற்களின் நால்வகை வகைப்பாடு, அவற்றின் பொதுவிலக்கணம், பெயர் வினைகளின் திணை, பால், எண் இட வகைப்பாடு இவை குறித்த ஈறுகள் என்பன போன்ற இலக்கணச் செய்திகளை மட்டுமே உரைக்கவில்லை. தொல்காப்பியர் சில்வகைச் சொற்களுக்கான பொருளை உரைப்பதையும் இலக்கணத்தின் பகுதியாகவே கருதியிருக்கிறார். இதனால்தான் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பற்றிய இயல்கள் சொற்பொருள் சுட்டும் அகராதி இயல்புடையனவாய்த் திகழ்கின்றன. இவ்வாறு சொற்பொருளுரைத்தலும் இலக்கணத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்ட நிலையில் சொற்பொருள் குறித்த வரையறைகளையும் தருவது இலக்கணப் படைப்பாளரின் கடமையாகின்றது. இத்தகு நோக்கில் சொற்கள் பொருள் குறித்தல், சொற்களின் கட்டிலா, கட்டுடைச்செயற்பாடு, சொற்களின் சொன்மை, பொருண்மை நிலைகள், வெளிப்படை, குறிப்புப் பொருண்மைகள், பொருண்மை நிலையிலான சொல்வகைப்பாடு என்பன போன்ற சொற்பொருட் செய்திகள் தொல்காப்பியத்தில் ஆங்காங்கே உரைக்கப்பெற்றுள்ளன. தொல்காப்பியர் உரைத்த இத்தகைய சொற்பொருட் செய்திகளே இக்கட்டுரையின்கண் விளக்கப் பெறுகின்றன.

சொல்லும் பொருளும்

இக்கால மொழியியலார் சொற்பொருட் கோட்பாடு பற்றி விளக்குகையில் (concept of meaning) கருத்துப் பொருளை மிக முக்கியமான கூறாய்ச் சுட்டுகின்றனர். ஆக்டென், ரிச்சர்ட்ஸ் ஆகியோரின் பொருள் முக்கோணம் எது பொருள் எனும் வரையறையில் உள்ள சிக்கல்களை நீக்கும் வகையில் சொல், உலகப் பொருள், கருத்து எனும் முக்கூறுகளில் கருத்திற்கு மிக முக்கியமான இடத்தை அளித்துள்ளது. எல்லாச் சொற்களுக்கும் உலகப்பொருள் இருத்தல் வேண்டும் என்ற கட்டாயம் இதில் இல்லை. அச்சொற்கள் பற்றிய எண்ணநிலை, கருத்து மட்டுமே போதுமானது என்பதை இப்பொருள் முக்கோணம் விளக்கு கின்றது. இத்தகைய நிலையில் தொல்காப்பியரும் சொற்

பொருளை விளக்கும் நிலையில் உலகப் பொருள் பற்றிய எண்ணத்தை முன் வைக்காது சொல்பற்றிய கருத்தையே முன்வைக்கும் நோக்கில்

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (155)* எனச் சொற்பொருள் வரையறையைச் சுட்டுகின்றார். இங்கு பொருள் என்பது சொற்பொருளே அன்றி உலகப்பொருள் அன்று.

கருத்து (Concept)

சொல் (Sound form) (word) உலகப்பொருள் (thing)

ஆக்டன், ரிச்சர்ட்ஸின் இப்பொருள் முக்கோணத்தில் தொல் காப்பியரின் சொற்பொருட் சிந்தனையைப் பொருத்திப் பார்க் கின்ற பொழுது அவர் கருத்து இப்பொருள் முக்கோணத்தின் சொல், கருத்து எனும் இடப்பகுதியையே வலியுறுத்துவதாய் உள்ளது. பெயர், வினை, இடை, உரி எனும் அச்சொற்கள் எல்லாம் ஏதாவதொரு வகையில் கருத்து, பொருள் உடையனவாய் இருத்தல் வேண்டும்.. பொருள் இல்லா எச் சொல்லும் இல்லை என்பதே தொல்காப்பியரின் சொற்பொருள் பற்றிய எண்ணம்.

இப்பொருள் முக்கோணத்தில் சொல், கருத்து குறித்த இடப் பகுதியே சிறப்பு வாய்ந்ததாய்ச் சுட்டத்தக்கது. இப்பொருள் முக்கோணம் பற்றி விளக்குகையில் ஸ்டீபன் உல்மன் என்பார் சொற்பகுதியில் கேட்போனையும் கருத்துப்பகுதியில் பேசுவோனையும் வைத்துச் சொல்லைக் கேட்டவுடன் கருத்தும் கருத்தை எண்ணியவுடன் சொல்லும் வெளிப்படுவதாய்க் காட்டுகின்றார். இதனை மேலும் அவர் விளக்குகையில் சொல் கருத்து எனும் இரண்டனுக்கும் இடையில் இணக்கமானதும் எதிர்மாறுந்தன்மையதுமான தொடர்பு (reciprocal and reversible relationship between name and sense) உண்டு என்கிறார்.

* நூற்பா எண்கள் சேனாவரையத்தை அடிப்படையாகக் கொண்டன,

சொல்லைச் சொன்னவுடன் கருத்தும் கருத்தை எண்ணியவுடன் சொல்லும் தோன்றுகின்ற இவ்விணக்கமான எதிர்மாறுந் தொடர்பே பொருள் என்கிறார் அவர். This reciprocal and reversible relationship between sound and sense which I propose to call the 'meaning' of the 'word' SEMANTICS Stephen Ullmann, P.

இத்தகைய நிலையில் தொல்காப்பியரும் இவ்விடைப் பகுதியையே வற்புறுத்துவதைப்போன்று உலகப்பொருள்பற்றி சுட்டாமல் சொல் அதன் பொருள் அல்லது கருத்து என்பதையே முன்வைக்கின்றார்.

எல்லாச் சொற்களும் பொருள் உடையன, பொருட்கு உரிமையுடையன எனச் சுட்டாமல் குறித்தனவே எனச் சுட்டியுள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கது. உலகப்பொருள், செயல், எண்ணம் என்பன பற்றி மனத்தில் தோன்றும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டனவே சொற்கள். புதிய கருத்துக்கள், கண்டுபிடிப்புக்கள் தோன்றும்போது புதிய சொற்களோ அல்லது ஏற்கனவே உள்ள பழஞ்சொற்களோ அக்கருத்தை, புதியபடைப்பைக் குறிக்கக் கையாளப் பெறுகின்றன. இச்சொற்கள் அவற்றை அவைபற்றிய கருத்தைக் குறிக்கும் கருவிகளாக குறியீடுகளாக இருந்து அவை குறித்தே கையாளப்பெறுகின்றன. இந்நிலையில் ஒரே கருத்தைக் குறிக்கப் பலசொற்களும் வெவ்வேறு கருத்தைச் சுட்ட ஒரே சொல்லும் கூட கையாளப் பெறலாம். இது அவ்வவ் மொழிவழக்கைப் பொறுத்தது. எனவே சொற்கள் பொருள் அல்லது கருத்தைக் குறிக்கும் குறியீடுகளாய் இருந்தே செயற் படுகின்றன என்பதைத்தான் தொல்காப்பியரின் குறித்தனவே என்னும் சொல்லாட்சி சுட்டுகின்றது. அவரவர் கண்ட உலகப் பொருள், புதிய படைப்புகள், புதிய எண்ணங்கள் எனும் இவற்றைச் சுட்டக் கையாளும் கருவியாகச் சொற்கள் இருத்தலாலேயே இத்தகைய பல்வகைச் சொற்களும் தோற்றம் பெற்றுள்ளன. அவரவர் பண்பாட்டில் எப்பொருட்களும், கருத்துக்களும் மிகுதியும் இடம் பெறுகின்றனவோ அவை குறித்த பல்வகைப்பட்ட பெயர்களும் வினைகளும் அவ்வச்சமூக மொழி வழக்கில் மிகுதியும் இடம்பெற்றிருப்பதும் ஒரேசொல் பல்பொருட்கு உரிமைபூண்டு வருவதும் சமுதாயத்தேவை நோக்கில் படைத்துக் கொள்ளப்பட்ட குறியீடுகளே சொற்கள் என்பதை உணர்த்துகின்றது.

'மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா' (394)
எனும் நூற்பாவுக்கு 'நால்வகைச் சொல்லுக்கும் பொருளை அறிவித்து நிற்கின்றதோர் காரணம்' எனவும் 'உலகத்துப் பொருள்களின் நிகழ்ச்சிக்கும் சொல் காரணம் ஆதலின் 'மொழிப் பொருட் காரணம்' என்றார் எனவும் நச்சினார்க்கினியர் எழுதுகின்ற பொருளும் விளக்கமும் சொற்களின் குறியீட்டுத் தன்மையை வலியுறுத்துகின்றன. ஆக, தொல்காப்பியர் சொற்கள், சொற்பொருளை / கருத்தைக் குறித்துக் கையாளப் பெறுகின்றன என்பதையும் ஒருசொல் குறிக்கும் பொருள் வழக்கிழக்கலாம் என்பதையும் புதிய கருத்தையோ, புதிய படைப்பையோ சுட்ட முன்பே உள்ள சொற்களையே கையாளலாம் என்பதையும் சுட்டும் நோக்கில் 'குறித்தனவே' எனும் சொல்லைக் கையாண்டுள்ளார்.

'கூறிய கிளவிப் பொருள்நிலை அல்ல
வேறுபிற தோன்றினும் அவற்றொடு கொளலே' (394)

என, உரிச்சொற்களுக்கு வரையறுத்து உரைத்த பொருட்களே அன்றிப் புதிய பொருட்கள் தோன்றுகின்ற பொழுது அப்புதுப் பொருட்களையும் அச்சொற்களுக்கான பொருளாய்க் கொள்ள வேண்டும். அப்புதுப் பொருட்களைச் சுட்டும் கருவியாய் இச்சொற்களைக் கொள்ளவேண்டும் எனப் பொருள் விரிவு சுட்டுவதும் சொற்கள் பொருள் குறித்துக் கையாளப்பெறும் குறியீடுகளே கருவிகளே என்பதை வலியுறுத்துகின்றது.

சொல் வழங்குநிலை :

பெயர், வினை, இடை, உரி எனும் நால்வகைச் சொற்களையும் அவற்றின் மொழிச்செயற்பாட்டு நோக்கில் இரண்டாய் வகைப்படுத்தி உரைக்கின்றார் தொல்காப்பியர்.

'சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே' (158)

'இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கின் தோன்று மென்ப' (159)

'இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே' (249)

எனும் நூற்பாக்கள் தனித்ததும் சார்புடையதுமான இவ்விரு வகை வழங்கு நிலைகளைத் தெளிவாய் வரையறுத்து உரைக்

கின்றன. பெயர் வினை, என்பன இரண்டும் தத்தமக்கெனத் தனித்த இயல்புடையனவாய்த் தனித்து வழங்கும் தன்மையன. இவற்றுக்கெனத் தனிச்சையான மொழிவழக்கு உண்டு. இவ்வாறன்றிப் பெயர் வினை எனும் இரண்டினையும் சார்ந்து அவற்றின் வழியே மொழிவழக்குப் பெறுந் தன்மையன இடையும் உரியும். ஆக, பெயரும் வினையும் தனிநிலைவழக்கும் இடையும் உரியும் சார்பு வழக்கும் உடையன என்பதைத்தான் இந்நூற்பாக்களால் தொல்காப்பியர் உரைக்கின்றார். இக்கால மொழியியலின் சொற்களின் மொழிச்செயற்பாட்டின் அடிப்படையில் அவை கட்டிலாவடிவம் (free form) கட்டுடைவடிவம் (bound form) எனஇரண்டாய் வகைப்படுத்தப்பெறும். இத்தகு சொற் செயற்பாட்டு நிலையைத்தான் தொல்காப்பியரும் சுட்டுகின்றார் எனலாம்.

சாரியைகள், காலஇடைநிலை, திணைபால் எண்ணிட விகுதிகள், வேற்றுமை உருபுகள், அசைகள், இசைநிறைகள், போல, புரைய, ஒப்ப என்பன போன்ற உவம உருபுகள் என்பன போன்ற இடைச்சொற்கள் (நூற்பா 250) சார்ந்து வரல் மரபின என்கிறார் தொல்காப்பியர். இவை அனைத்தும் மொழியில் தனித்து நடக்குந் தன்மையன அல்ல, பெயர்வினை-களைச் சார்ந்து நின்று சார்பு வழக்குப் பெற்று நடக்கின்றன என்பதைத்தான் தொல்காப்பியர் பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலுந் தமக்கியல்பிலவே என்பதால் உரைக்கின்றார்.

இனி, உரிச்சொற்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் தமக்-கியல்பில எனச் சுட்டாமல் 'பெயரினும் வினையினும் மெய்தடு-மாறி' என வழக்குநிலை உரைக்கின்றார் தொல்காப்பியர். இவை தமக்கென வரையறுத்த இயல்புடையனவாய் இன்றிப் பெயர்ப் போலியாயும் வினைப்போலியாயும் நடக்குந் தன்மையைத்தான் இவ்வாறு தொல்காப்பியர் சுட்டுகின்றார்.

சீர்த்தி, மாலை, கெடவரல், பண்ணை, கறுப்பு, சிவப்பு என்பன பெயர்த் தன்மையனவாய்ச் செயற்படுகின்றன. நனி என்பது 'நனி கொள் முரசு' 'நனி உடை பெருஞ்சினை' என்ற சூழல்களில் பெருமை, செறிவு எனப் பெயர்ப் பொருண்மையிலும், 'நனி மரக்கா' 'நனி நீர்' எனவரும் இடங்களில் செறிந்த என வினைப் பொருண்மையிலும் செயற்படுகின்றன. மேலும் 'நனி சுனை' எனும் நிலையில் 'பெரிய' எனவும் 'நனி பொருள்' சூழலில் 'மிக்க' எனப் பெயரடையாயும் 'நனி உண்டான' 'தவச்சிறிது' எனும் இடங்களில் மிக என வினையடையாயும்

அவ்வச் சொல்லிணைவு நிலைகளுக்கும் பயன்பாட்டுச் சூழல் களுக்கும் தக்கவாறு உரிச்சொற்கள் செயற்படுகின்றன. இவ்வாறு பெயர்ப்போலி வினைப்போலியாவும் பெயரடை வினையடைகளாகவும் செயற்படும் மொழிவழக்கு நிலை நோக்கில்தான் இவ்வுரிச்சொற்கள் பெயரினும் வினை எனும் மெய்தடுமாறி வரும் என அவற்றின் சார்புநிலை சுட்டப் பெற்றது.

பொருண்மை :

மொழியியலார் சொற்களின் பொருண்மை நிலையைச் சுட்டுகையில் அவை இலக்கணப்பொருள் (Grammatical meaning), சொற்பொருள் (Lexical meaning) எனும் இருவகைப் பொருண்மை உடையன என்பர். இவ்விருவகைப் பொருண்மை களைச் சுட்டும் நிலையில் தொல்காப்பியரும்,

> 'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
> சொல்லி னாகும் என்மனார் புலவர்' (156)

என நூற்பா அமைத்துள்ளார். சொன்மை என்பது சொற்களின் சொல்லியல்பு பற்றியது. சொற்களின் பெயர், வினை, இடை, உரி, பெயரெச்சம், வினையெச்சம், பெயரடை, வினையடை, ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர், தொழிற்பெயர், குறிப்பு வினை என்பன போன்ற சொல்லின் இலக்கணச் செயற் பாட்டுத் தன்மைகளைத்தான் தொல்காப்பியர் 'சொன்மை' எனுஞ் சொல்லால் குறிக்கின்றார் இவ்வாறன்றிச் சொற்கள் சொற்பொருளை உணர்த்தி வருந்தன்மைகளை அறிதலைத் தான் 'பொருண்மை தெரிதல்' எனுஞ் சொல்லால் சுட்டுகிறார்.

வளர்ந்த அகராதியியல் நெறிகளுக்கு உட்பட்டுத் தொகுக்கப் பெறும் அகராதிகள் பலவும் சொற்களைப் பதிவுகளாய்க் கொண்டமைக்கும் நிலையில் அவ்வச் சொற்களுக்கான வழக் காற்றுப் பொருண்மைகளை உரிய சான்றுகளுடன் விளக்குவ தோடு நின்றுவிடாமல் மொழிவழக்கில் அவ்வச்சொற்களின் செயற்பாட்டுச் சூழலால் தோன்றும் இலக்கணத் தன்மைகளை யும் சுட்டும். இத்தகு நிலையில் தொல்காப்பியரும் இடை, உரி இயல்களில் இடை உரிச்சொற்களுக்கான பொதுவான இலக்கணக் குறியீட்டைச் சுட்டிவிட்டுப் பின்னர் ஒவ்வொரு இடை, உரிகளுக்கென பொருண்மைகளை வரையறுத்து உரைக் கின்றார். இவ்வாறே வினையியலில் பல்வகையான திணை, பால், எண், இடவிகுதிகளையும் அவற்றின் பொருண்மை

நிலைகளையும் சுட்டிய தொல்காப்பியர் அவற்றின் பொதுவான பொதுவகையான இலக்கணக் குறியீட்டை இடைச்சொற்களைச் சுட்டுகையில் அவைதாம் புணரியல் நிலையிடைப்பொருள் நிலைக்குதவும் வினைசெயல் மருங்கில் காலமொடு வருந: என அவற்றைத் தொகுத்துக் குறிப்பிடல் வழி இடைச்சொல் எனப் பெறவைக்கின்றார்.

சொன்மை, பொருண்மை குறித்த இந்நூற்பாவுக்கு நச்சினார்க்கினியர், சேனாவரையர், இளம்பூரணர் மூவரும் முறையே, "செய்தென் எச்சம், தஞ்சக்கிளவி, வேறென் கிள்வி, செய்கென் கிளவி, கடியென் கிளவி இவை சொல் தன்மை தெரிந்தன அச்சொற்றன்னையே அறியப்படுதலின்" (ப. 100) எனவும் 'ஆயிரு திணையி னிசைக்குமென சொல்லே, எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே, ஈறுபெயர்க் காகும் இயற்கைய வென்ப என்புழிச் சொல்லென்னுஞ் சொல்லும் பெயரென்னும் பெயரும் அறியப்படுதற்கண் சொ மை தெரிதலாம்' (ப 106) எனவும் 'தஞ்சக்கிளவி, கடியென் கிளவி என்பனவற்றால் பொருள் உணரப்படாது அச்சொற்றாமேஉணரப்பட்டவாறு கண்டு கொள்க' (ப. 84) எனவும் சான்றுகாட்டிச் சொன்மையை விளக்கியுள்ளார். இவர்கள் மூவரும் எச்சொல் சொல்லப் பட்டதோ அச்சொல்லை உணர்த்துதலே சொன்மை தெரிதல் என்கின்றனர். இவ்வாறன்றி இந்நூற்பாவின் உண்மைப் பொருளைத் தெரிவிக்கும் வகையில் தெய்வச் சிலையார் ஒருவர் மட்டுமே பின்வருமாறு விளக்கம் உரைக்கின்றார்.

> 'நிலம் என்பது பொருளின் தன்மை ஆராய்வார்க்கு
> மண்ணினான் இயன்றதோர் பூதம் என்றாயிற்று
> சொல்லின் தன்மை ஆராயவார்க்குப் பெயர்ச்சொல்
> என்றாயிற்று அதனான் இருபகுதிய சொல்நிலைமை
> என்றவாறு' (ப. 89)

எனச் சொல்லின் இலக்கணச் செயற்பாட்டு நிலையையும் சொற்பொருள் நிலையையும் தெளிவாய் விளக்குகிறார் தெய்வச்சிலையார், இங்கே மண்ணான் இயன்றதோர் பூதம் எனச் சுட்டியிருப்பது சொற்பொருள் விளக்கமே அன்றிப் பிறிதில்லை நிலம் என்பது உலகப் பொருளைச் சுட்டினாலும் அதன் சொற்பொருண்மையை விளக்குகையில் அவ்வுலகப் பொருளின் இயல்பை விளக்குவது அவசியமாகிறது. இந் நிலையில்தான் நிலம் என்பதன் சொற்பொருள் இங்கு விளக்கப் பட்டுள்ளது. பொதுவாக ஆங்கில அகராதிகளில் உலகப்

பொருள் குறித்த சொற்களுக்கு அப்பொருளின் இயல்பு பற்றிய விளக்கங்களும் செயல் பற்றிய சொற்களுக்கு அச்செயல்களின் இயக்கத் தன்மைகளும் சொற்பொருளாய் விளக்கப் பெற்றிருப்பதை இங்கே நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தெரியும் குறிப்பும் :

சுருஸ்தா சொற்பொருட் கூறை மூன்றாய் வகைப்படுத்தி உரைக்கின்றார். 1. கருத்துப்பொருள் (designation) 2. குறிப்புப் பொருள் (connotation) 3. பயன்பாட்டெல்லை (Range of application) என்பன அவை. இத்தகைய நிலையில் இம் மூக்கூறு பற்றிய செய்திகளும் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. சொன்மை, பொருண்மை எனும் இந்நிலை களை உரைத்த தொல்காப்பியர் பொருண்மையை மேலும் இரண்டாய்ப் பகுத்து,

> ‘ தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற் றோன்றலும்
> இருபாற் றென்ப பொருண்மை நிலையே ’ (157)

எனத் தெரிபும் குறிப்பும் எனச் சுட்டுகின்றார். இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் எனும் மூவரும், அவன், இவன், உவன், வந்தான், சென்றான், என்பன போன்றவற்றை தெரிபு வேறு நிலையலுக்கும் சோறுண்ணா நின்றான். கற்கறித்து ‘நன்கட்டாய்’ ஒருவர் வந்தார் என்பனவற்றைக் குறிப்பிற் றோன்றுவனவற்றுக்கும் சான்றாய்க் காட்டியுள்ளனர். தெய்வச் சிலையார் இவர்களினின்றும் சற்றே வேறுபட்டுக் குறிப்பில் தோன்றுவனவற்றுக்குக் காட்டும் சான்றுகள் எண்ணிப்பார்க்கத் தக்கனவாய் உள்ளன.

> ‘ தெரிபு வேறு நின்றன ’ நிலம், நீர், தீ, வளி எனப் பொருள் உணர்த்துவனவும்; உண்டான், தின்றான், எனத் தொழில் உணர்த்துவனவும் குறிப்பிற் றோன்றின — இவன் நெருப்பு,பசு எனக் குணம் பற்றியும் தீமை செய்தாரை நன்மை செய்தீர் எனவும்; கொடுமை செய்தாரை வாழ்வீராக எனவும் அப் பொருள் பயவாது பிறபொருள் பயப்ப வருவன ’ (ப. 89)

எனச் சான்று காட்டி விளக்கித் தெரிபு என்பது வெளிப்படைப் பொருள் அல்லது இயல்புப் பொருள் என்பதையும் குறிப்பு என்பது வெளிப்படு பொருள் அல்லது குறிப்பால் உணரப்படும் பொருள் என்பதையும் உரைக்கின்றார்.

பெயர், வினை, இடை, உரி என்னும் எவ்வகைப்பட்ட சொற்களுக்கும் அச்சொல் குறிப்பிடும் உலகப்பொருள், சொற்களின் தோற்றுவாய்க்கு,குறிப்பீட்டிற்கு அடிப்படையான செயல், கருத்து / எண்ணம் போன்றவற்றுக்கும் இடைப்பட்ட உறவில் மொழி பேசுவோரால் உணர்ந்துகொள்ளப்பட்ட உண்மை நிலை தான் கருத்துப்பொருள். இதைத்தான் சுகுஸ்தா designation எனக் குறிப்பிடுகின்றார்.[1] இத்தகைய நிலையில்தான் தெய்வச் சிலையாரும் நிலம் முதலிய உலகப்பொருட்களை உணர்த்துவதையும் உண்ணல் முதலிய தொழில்களை உணர்த்துவனவும் தெரிபு வேறு நின்றவை என்கிறார். இவ்விளக்கங்கள், சொற்கள் தம் தோற்றுவாய்க்கு அடிப்படையான பொருள், செயல் போன்றவற்றையும் பிறவற்றையும் இயல்பாய் எவ்விதப் பொருள் மாற்றமும் இன்றி உணர்த்துந் தன்மையே தெரிபு அல்லது வெளிப்படைப் பொருள் என்பதை விளக்குகின்றன.

இனிக்குறிப்புப் பொருளுக்கு இவன் நெருப்பு இவன் பசு எனத்தெய்வச் சிலையர் காட்டும் சான்று குறிப்புப்பொருளின் இயல்பைத் தெளிவாய் விளக்குவதாய் உள்ளது. வேறு எவ் வுரையாளிசுளும் காட்டாததும், இக்கால மொழியாய்வாளருக்கு உரியதுமான தெளிவுடனும் இக்காட்டுகளைத் தெய்வச்சிலையார் காட்டியிருப்பது நினைந்து நோக்கத்தக்கது.

பயன்பாட்டெல்லை என்பதைத்தவிரக் கருத்துப் பொருள் அல்லாத பிறபொருட்கள் அனைத்துமே குறிப்புப் பொருளில் அடங்கும் என்கிறார் சுகுஸ்தா. மேலும் அவர் உணர்வுப் பூர்வமான வெளிப்பாட்டு நிலை, நடைவேறுபாடு, வஞ்சப் புகழ்ச்சி,நகைப்பு புதுச்சொல் என்பன போன்றவையே குறிப்புப் பொருள் தோற்றுவாய்க்கான அடிப்படைக் காரணங்கள் என்கிறார் (Manual of Lexicography, pp. 38, 40).

இத்தகைய நிலையில் நமது உரையாசிரியர்களும் இவன் பசு, இவன் நெருப்பு, கல்சுறித்து நன்கட்டாய் எனல், தீமை செய்தாரை நன்மை செய்தீர் எனல் என்பன போன்றவற்றைச் சான்றாய்க் காட்டுகின்றனர்.

---

1. By the designation we mean above all the relations existing between the single parts of the extralinguistic world, as conceived by the speaker of a language"

— Manual of Lexicography, P. 27

தகுதியும் வழக்குந் தழீஇயின வொழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே (17)

அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல் (442)

என்பன போன்ற நூற்பாக்களால் தொல்காப்பியர் சுட்டும் மங்கலம், குழூக்குறி இடக்கரடக்கல் என்பன போன்றவற்றை இக்குறிப்புப் பொருளினவாய் நாம் கருதலாம். செத்தாரைத் துஞ்சினார் என்பதும் சுடுகாட்டை நன்காடு என்பதும் கை கழுவுதல் என்பதும், கால்கழுவுதல் என்பதும் கள்ளுண்பார் விற்பார் கள்ளைச் சொல் விளம்பி என்பதும் இயல்பான சொற் பொருளை உணர்த்தாமல் குறிப்பால் வேறுபொருள் உணர்த்தி வந்துள்ளன. இவை எல்லாம் குறிப்பில் தோன்றும் பொருண்மையனவே.

பயன்பாட்டெல்லை :

இனிச் சொற்பொருட் கூறுகளில் மூன்றாவதாகச் சுட்டப் பெறும் பயன்பாட்டெல்லை என்பதைப் பெயரியலில் இப் பொருண்மை நிலையைச் சுட்டுமிடத்துத் தொல்காப்பியர் சுட்ட வில்லை. எனினும் எச்சவியலில் ஈ, தா, கொடு எனுஞ் சொற் களின் சமுதாய வழக்காற்றைச் சுட்டுதல் வழியும் கிளவி யாக்கத்தின்கண் செலவு, வரவு, தரவு, கொடை எனுஞ் சொற் களின் தன்மை முன்னிலை, படர்க்கை எனும் இடவழக்கு நிலை களைச் சுட்டல் வழியும் குறிப்பிடுவதாய்க் கொள்ளலாம்.

'ஈதா கொடுவெனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைய' (444)

'அவற்றுள்
ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே' (445)

'தாவென் கிளவி ஒப்போன் கூற்றே' (446)

'கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே' (447)

ஈ, தா, கொடு, என்பன மூன்றும் பிறரிடம் கொடை வேண்டிப்பெறும் இரப்புக்கிளவிகள். இவை முறையே இழிந்தோன், ஒப்போன், உயர்ந்தோன் கூற்றுக்களாய் வருதல் வேண்டும். இப்பயன்பாட்டு எல்லையின்படி இழிந்தோன் ஈ எனவும் ஒப்போன் தா எனவும் உயர்ந்தோன் கொடு எனவும் பொருளைக் கேட்டல் வேண்டும். எனக்கு ஈ எனக்குத் தா, எனக்குக் கொடு எனக் கேட்டுப்பெறும் கூற்றுக்களாய் வருமிடத்தே இழிந்தோன், ஒப்போன்

உயர்ந்தோன் கூற்றுக்கள். ஏனைய நிலையில் தந்தான், கொடுத்தான், ஈந்தான் என வரும் நிலையில் இவை ஒப்போன், உயர்ந்தோன், இழிந்தோன் ஆகியோருக்குக் கொடுத்தான் என் வராது. இதைப்பிழைபட உணர்ந்து கொண்டமையால் தான் சில அகராதிகள் ஈ-தல் தா-தல் (தருதல்) எனும் பதிவுகளில் இழிந்தோனுக்குக் கொடுத்தல், ஒப்போனுக்குக் கொடுத்தல் எனப் பொருள் கொடுத்துவிட்டன. எனவே இம் மூன்று சொற்களும் பிறரிடம் பொருள் வேண்டும் நிலையில் தகுதிப்பாட்டின் அடிப்படையில் இன்னார், இன்னசொல்லைப் பயன்படுத்தினர் பயன்படுத்தவேண்டும் என்ற தகுதிப்பயன் பாட்டெல்லையை உடையன என்பதை இந்நூற்பாவால் வரையறுத்து உரைக்கின்றார்.

'செலவினும் வரவினும் தரவினுங் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப (28)

அவற்றுள்
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீரிடத்த
ஏனை யிரண்டும் ஏனை யிடத்த (30)

இந்நூற்பாக்களுக்குத் தெளிவினைத் தரும் வகையில் உரை விளக்கங்கள் அமையவில்லை. எனக்குத் தந்தான், என்னிடம் வந்தான். நினக்குத்தந்தான், நின்னிடம் வந்தான், எனத் தரு வரு சொற்கள் தன்மை முன்னிலை இடத்து வந்தன எனவும் அவனிடம் சென்றான், அவனுக்குக் கொடுத்தான் எனச்செல், கொடு எனும் சொற்கள் படர்க்கை இடத்து வந்தன எனவும் சான்று காட்டியுள்ளனர். இது ஏற்புடைய பொருத்தமான விளக்கந்தானா என்பது ஆராய்ந்து பார்க்கத்தக்கது.

ஈ, தா, கொடு எனும் சொற்களின் கொடை வேண்டு நிலையிலான பயன் பாட்டெல்லையை உரைத்த சூழலில் கொடு என்பது உயர்ந்தோன் கூற்றாய் வரும் என உரைத்த பின்னர்,

'கொடுவென் கிளவி படர்க்கை யாயினும்
தன்னைப் பிறன்போல் கூறும் குறிப்பில்
தன்னிடத் தியலும் என்மனார் புலவர்' (448)

எனக் கொடையில் நிலைபெறத் தோன்றும் கொடு எனும் சொல் படர்க்கையிடத்தே வரும் என்று கிளவியாக்கத்துள் கூறிய

பயன்பாட்டெல்லை வரையறைக்கு விதிவிலக்கு உரைத்துள்ளார் தொல்காப்பியர். அங்குக் கொடையினும் என உரைத்த சொல்லை ஈண்டுக் கொடுவென் கிளவி எனச் சுட்டியுள்ளமை ஈண்டுக் கவனத்திற் கொள்ளத்தக்கது. இதனடியாகப் பார்க்கின்ற பொழுது செலவு, வரவு, தரவு, கொடை எனச் சுட்டிய சொற்கள் நான்கையும் செல், வா, தா, கொடு எனத் தொழில் முதனிலையாய்க் கொள்ள வேண்டுமா என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. இந்நிலையில் அவற்றை முதனிலைகளாய் வைத்தே தன்மை, முன்னிலை, படர்க்கை இடங்களை வரையறுக்க வேண்டுமா என்பது எண்ணிப்பார்க்கத்தக்கது. காரணம் செல் எனும் சொல் என்னிடம் செல், நின்னிடம் செல் என வருதல் இல்லை. இது அவனிடம் செல் என மட்டுமே வரும். இவ்வாறே கொடு என்பது எனக்குக் கொடு அவனுக்குக் கொடு என மட்டுமே வரும்; நினக்குக் கொடு என வராது. இவ்வாறு முதனிலையாய் நிறுத்தித் தன்மை, முன்னிலை, படர்க்கை இடங்களில் இட்டுப்பார்க்கின்ற பொழுது அவை சில இடங்களில் வாராமை தெளிவாய்ப் புலனாகின்றது. இங்குத் தொல்காப்பியர் தன்மை, முன்னிலை, படர்க்கை என்பனவற்றை எந்நிலையில் குறிப்பிட்டுள்ளார் என்பதும் செலவு, வரவு, தரவு, கொடை எனும் சொற்கள் எந்நிலையில் எத்தகைய சொல் விரிவு நிலையில் இவ்வாறு வரையறுக்கப்பட்ட இடப் பயன்பாட்டெல்லை உடையன என்பதும் அறிஞர்களால் ஆராய்ந்து தெரிய வேண்டியதொரு சிக்கலேயாகும். தொல்காப்பியருக்குப் பிற்பட்ட மொழிவழக்கில் தந்தான், கொடுத்தான் என்பன போன்ற சொற்கள் எனக்குத்தந்தான், எனக்குக் கொடுத்தான், நினக்குத்தந்தான், நினக்குக்கொடுத்தான், அவனுக்குத் தந்தான், அவனுக்குக் கொடுத்தான் என மூவிடத்தும் வருகின்ற இத்தகு சூழல்களை விடுத்துத் தொல்காப்பியர் காலச்சூழலில் இச்சொல்லின் எச்சொல்விரிவு இத்தகைய வழக்கு வரையறையில் பயன்பட்டது என்பது ஆராயத்தக்கதொன்றே.

பொருண்மை நிலையிலான சொல்வகைப்பாடு :

இலக்கணச் செயற்பாடு மொழி வழக்கு எனும் நோக்கங்களில் தொல்காப்பியர் சொற்களை முறையே பெயர், வினை, இடை, உரி எனவும் இயற்சொல், திரிசொல், திசைசொல், வட சொல் எனவும் நன்நான்காய் வகைப்படுத்தி உரைத்துள்ளார். இவற்றை இவ்வாறு வகைப்படுத்தியமை போன்று பொருண்மை நிலையில் சொற்களைப் பலபொருள் ஒரு சொல் எனவும் ஒரு

பொருள் பல சொல் எனவும் இரண்டாய் வகைப்படுத்தி உரைத்துள்ளார். உரியியலில்,

‘ ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும் ’ (297)

என உரிச்சொற்களைப் பலபொருளொரு சொல் எனவும் ஒரு பொருள் பலசொல் எனவும் பொருள்தரு நோக்கில் இரண்டாய் வகைப்படுத்துகிறார். இவ்வடிப்படையில் ஒருரிச்சொல் பல பொருளையும் பல உரிச்சொற்கள் ஒரு பொருளையும் உணர்த்துந் தன்மைகள் விளக்கப்பட்டுள்ளன

‘ உறுதவ நனியென வரூஉ மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப ’ (299)

‘ ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம் (330)

என ஒரு பொருட்குரிய பல சொற்களும்

‘ கம்பலை சும்மை கலியே அழுங்கல்
என்றிவை நான்கும் அரவப் பொருள (349)

‘ அவற்றுள்
அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும் ’ (350)

கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்சம் முன்தேற்று ஆயீரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே ’ (383)

எனப் பல பொருள் குறித்த சொற்களும் உரியியலில் காட்டப் பெற்றுள்ளன.

எச்சவியலில் மொழிவழக்கு நிலையில் சொற்களைப் பாகுபடுத்தி உரைக்கையில் திரிசொற்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது

“ ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி ’ (399)

எனத் திரிசொற்கள் ஒருபொருள் பலசொல்லாயும் (வெற்பு, விலங்கல், விண்டு = மலை) பலபொருட் சொல்லாயும் (உந்தி—

யாழ்ப்பத்தல், கொப்பூழ், தேர்த்தட்டு கான்யாறு) வரும் நிலையின என்பது விளக்கப்பட்டுள்ளது.

பல்பொருட் சொற்கள் :

இவ்வாறு உரிச்சொற்களும் திரிசொற்களும் இவ்விரு வகைப் பொருள்நிலை வகையினவாய் வரத்தக்கன என்பதனை உரைத்த தொல்காப்பியர் இவ்விரு சொற்களின் பொருள் தெரிநிலைகள் செயற்பாடுகள் சிலவற்றையும் தெளிவுபடுத்தி யுள்ளார்.

கிளவியாக்கத்தில் பலபொருட் சொற்களை வினை வேறு படும் பலபொருள் ஒரு சொல் எனவும் வினைவேறுபடாப் பல பொருள் ஒருசொல் எனவும் (52) வினை வேறுபடும் பலபொருள் ஒருசொற்கள் வேறுபடுவினை (மா ஓடிற்று, மா பூத்தது), இனம் (மாவும் மருதும் வளர்ந்தன), சார்பு (கவசம் பூண்டு மா கொணர்க எனல்) எனும் இவற்றால் பொருள் வேறுபடும் என்பதையும் (53) பலபொருட்சொற்களைப் பொருள் வேறு பாட்டுடன் கையாளுகையில் பொருள் தெளிவாய் புலப்படுமாறு கையாள்தல் வேண்டும் (55) என்பதையும் தெளிவிக்கின்றார். இங்கெல்லாம் தொல்காப்பியர் பலபொருட்சொல் என்பதை இக்கால வழக்கில் உள்ளதைப்போன்று பொருள் தொடர் புடையன (polysemy) பொருள் தொடர்பற்றன (homonymy) எனவோ வகைப்படுத்திக் கொள்ளவில்லை. இவ்விரண்டையும் உள்ளடக்கியதாகவே பலபொருள் ஒருசொல் என்பதைக்கொள்ள வேண்டும். வெறுமனே இவற்றை homonymy எனச் சுட்டின் அது பொருந்தாது.

மீமிசைச்சொல் :

தொல்காப்பியர் ஒருபொருள் பலசொற்களின் மிகைப்பாடு குறித்தோ அவற்றைக் கண்டறிவதற்கான நெறிமுறைகள் குறித்தோ ஏதும் உரைக்கவில்லை என்ற போதிலும் இவ்வொரு பொருட் சொற்கள் இரண்டு தம்முள் இணைந்துவரும் இணை நிலைத் (Collocation) தன்மையைச் சுட்டி அது ஏற்றுக் கொள்ளத்தக்க இணை நிலை வழக்கே என்பதை வலியுறுத்து கிறார் இதனை.

'ஒருபொருள் இருசொல் பிரிவில வரையார்' (460)

எனும் நூற்பாவில் உரைத்துள்ளார். இந்நூற்பாவுக்கான உரை யில் 'உயர்ந்தோங்கு பெருமலை' 'உச்சிமீமிசை' 'நிலத்துவழி

மருங்கிற் றோன்றலான' எனத் தெய்வச்சிலையாரும் 'நிவந்தோங்கு பெருமலை' 'துறுகல் மீமிசை' எனச் சேனாவரையரும் சான்றுகள் காட்டி இத்தகுநிலையில் ஒருபொருட் பன்மொழிகள் தம்முட் பிரிவின்றித் தொடர்ந்துவரின் அவற்றை மொழி வழக்கன்று என நீக்கார் என விளக்குகின்றார்.

இக்கால மொழியியல் ஆய்வில் இஃதொத்த கருத்து நிலவு வதை இங்கே நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். ஸ்டீபன் உல்மன் ஒருபொருட்பன்மொழிகளைப் பற்றி ஆய்கையில் ஒருபொருட்பன்மொழியும் நடையும் எனும் தலைப்பில் ஒருபொருட் பலசொல் செறிவு ஒருபொருட்சொல் இணைவு எனும் இருநிலைகளைச் சுட்டியுள்ளார் ஒருபொருட்பலசொல் இணைவு என்பதில் மாறுபடுநிலை (variation) இணைநிலை (collocation) எனும் இருநிலைகளைக் குறிப்பிடுகிறார். இவ்விணைநிலை என்பதில் அவர் ஒருபொருட் பன்மொழிகள் ஒரு பொருளைத் தெளிவுடனும் மிக்க அழுத்தத்துடனும் சொல்லும் நிலையில் இணைந்து வழங்கப்படுகின்றன என்கின்றனர் தொல்காப்பியர் ஒருபொருட்பன்மொழிகளை இவ்வாறு இணைத்துச் சொல்வதற்கான காரணத்தைச் சுட்டவில்லை என்றாலும் இவை இணைந்து வரும் மொழியியல்பினைத் தெரிந்து உரைத்துள்ளார்.

முடிவுரை :

தொல்காப்பியத்தில் சொல்லப்பெற்றுள்ள சொற்பொருள் செய்திகளையும் உரையாசிரிகளின் உரை விளக்கங்களையும் மொழியியல் சிந்தனையுடன் இணைத்துப் பார்க்கின்றபோது தொல்காப்பியர் மிகத் தெரிந்த நோக்குடனும் அறிவியல் பூர்வமான மொழிச் சிந்தனையுடனும் சொற்பொருட் செய்திகளை வெளிப்படுத்தியுள்ளமை தெளிவாய்ப் புலனாகின்றது.

இவர் சிறந்த சொற்பொருட் சிந்தனையுடையவராய் இருந்த காரணத்தால்தான் தல்லதொரு அகராதிக் கலைஞர்க்குரிய இயல்புடன் இடையியலிலும் உரியியலிலும் அவ்வச் சொற்களுக்கான சொற்பொருளைத் தெளிவாய் உரைத்துள்ளார். மேலும் பயிலாதவற்றைப் பயின்ற சொல்லால் விளக்குதல், பொருட்குப் பொருள் தெரிதல் வரம்பின்று, பொருட்குத் திரிபில்லை உணர்ந்தவல்லின், உணர்ச்சிவாயில் உணர்வோர் வலித்து என்பன போன்ற சொற்பொருள் விளக்கச் செய்திகளையும் தெளிவு படுத்துகின்றார்.

தொல்காப்பிய மொழிச்சிந்தனைகளை, மொழியியல் சிந்தனைகளின் அடியாக விளங்கிக் கொள்ளும் பொழுதுதான் தொல்காப்பிய நூற்பாக்களின் தெளிந்த பொருளையும் தொல்காப்பியரின் வளமார்ந்த மொழிநோக்கையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

ஆய்வுத்துணை நூல்கள்

1. சொல்லிலக்கணக் கோட்பாடு — செ. வை. சண்முகம், அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர், 1984.
2. தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு — வ. ஜெயதேவன், ஐந்திணைப் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை, 1985.
3. தொல்காப்பியம் — சொல்லதிகாரம் — இளம்பூரணர் (உரை) சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1963.
4. — — சேனாவரையர் (உரை) சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுபதிப்பு, 1980.
5. — — தெய்வச்சிலையார் (உரை), சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1963.
6. — — நச்சினார்க்கினியர் (உரை), சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுபதிப்பு, 1974.
7. Manual of Lexicography — Ladislav Zgusta, Mouton, The Hague, 1971.
8. Semantics—An Introduction to the Science of Meaning — Stephen Ullmann, Oxford, Blackwell, 1962

மக்கள் பாடல்களில் மருத்துவம்

டாக்டர். மா. மீனாட்சி சுந்தரம்,
திட்ட உதவியாளர், மொழியியல் துறை
பாரதியார் பல்கலைக் கழகம், கோவை - 46.

கிராம மக்களின் பண்பாட்டுக் கருவூலமாகத் திகழும் பாடல்கள் பலவகைப்படும். தாலாட்டு, சிறுவர்பாடல், காதற் பாடல், ஒப்பாரி போன்றவற்றில் பிணிநீக்கும் மருத்துவச் செய்திகள் இடம் பெற்றமை இனிமை தரும்.

ஒரு தாய் குழந்தையைத் தாலாட்டுகிறாள். குழந்தை உறங்காமல் புரண்டு புரண்டு அழுகிறது. வாயுக்கோளாறு உடம்பு வலியைத் தரலாம். பலமணிநேரம் ஒரே இடத்தில் கிடப்பதாலும் வேதனை தோன்ற முடியும். இதற்குப் புற மருத்துவமாக ஒத்தடம் கொடுக்கலாம். அக மருந்தாக ஏலமும், இஞ்சியும் கலந்த சாறு எட்டுச் சொட்டாகப் பாலில் கொடுக்கலாம். அம்முறை தாலாட்டாக மலர்கிறது.

> உடம்பெல்லாம் நோகுதம்மா — கண்ணே
> உனக்கு ஒத்தடம்தான் கொடுக்கட்டுமா ?
> ஏலமும் இஞ்சிச்சாறும் கண்ணே உனக்கு
> எட்டுச் சொட்டுக் கொடுக்கட்டுமா ?
> எண்ணெயிலே ஒத்தடமும் கண்ணே
> வெந்நீரில் ஒத்தடமும்
> இன்னம் வேறே ஒத்தடமும் — கண்ணே
> உனக்குக் கொடுக்கத் தாதி உண்ணே ".

எண்ணெய், வெந்நீர் தவிடு முதலியவற்றால் ஒத்தடம் கொடுக்கும் முறை இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது.

தலைவிக்குக் கோரோசனை மாத்திரையைத் தாய்ப்பாலில் விட்டரைத்து உள்ளுக்குப் புகட்டுவார்கள். இல்லையெனில் நீலகிரித் தைலத்தை நெற்றியில் தடவுவர். அச்செய்திகளும் கவிதையாகின்றன.

> " மண்டையிடி பொறுக்கலையோ — கண்ணே
> உனக்கு மருந்தரைத்துப் போடட்டுமா ?
> கோரோசனை கொடுக்கட்டுமா ?

மண்டையிடித் தைலம் கூட — கண்ணே
உனக்கு மாமன் வாங்கி வாராரு
தொந்தரவு செய்யாமே — கண்மணியே
தொட்டிலிலே தூங்கிடம்மா.''

வளரும் குழந்தைகட்குப் பெரும்பாலும் ஈரல்நோய் வருவதுண்டு. அதனால் போதிய இரத்தம் தோன்றாமல் கை கால் வீங்கிச்சோகை, காமாலை போன்ற நோய்கள் வரக்கூடும். இதற்கு ஏற்றது கணை எண்ணெய், ஒரு துண்டு வசம்பு சிறிது மூக்கிரட்டைவேர் இரண்டையும் இடித்துத் தூள் செய்து ஆமணக்கெண்ணெயில் கலந்து காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு வாரம் ஒரு முறை குழந்தைக்குப் புகட்டுவார்கள். அச்செய்தியும் தாலாட்டில் இடம் பெறுகிறது.

"கைகாலு வீக்கத்துக்கு — கண்ணே உனக்கு
கணை எண்ணெய் வாங்கித் தாரேன்
மலைபோல வந்தாலும் — கண்மணியே
பனிபோல விலகிடும்மா".

வயிற்றுளைச்சல் நிற்கவேண்டுமே! அதற்கும் மருந்துண்டு. மிகையான உணவு காரணமாகவும் வாயுச்சேர்க்கையாலும் வயிற்றுளைச்சல் ஏற்பட்டு வலி உண்டாகும். இவ்வலி நிற்க, வெற்றிலை ஒன்றினைக் காம்பு நீக்கி அதில் சிறிது உப்பு வைத்து வெறும் வயிற்றில் மென்று தின்றால் போதும் உமிழ்நீர் பெருகிச் செரிமானம் எளிதாகும்.

"வயிற்றுளைச்சல் மிஞ்சிப்போய் — கண்ணே
உனக்கு வயிற்றுவலி வந்திடுச்சா?
வெற்றிலையும் உப்பும் வச்சு — கண்மணியே
வெறும் வயிற்றில் தின்னுடம்மா"

குழந்தைகளுக்குச் சிலபோது குடலேற்றம் வரக்கூடும். தாழ்வான பகுதியில் தலைவைத்துப் படுத்தாலோ வேறு காரணத்தாலோ குடல் தன் நிலை தவறி ஏற்றம் கண்டு வயிற்று இரைச்சலுடன் பேதியாகும். குடலேற்றம் கண்டால் குப்புறப் படுக்க வைத்து நடுமுதுகில் சாம்பல் பூசி இடுப்புப் பகுதியிலிருந்து கழுத்துப் பகுதி வரையுள்ள முள்ளந்தண்டுச் சதையினை இரண்டு விரற்கிடை இடைவெளியிட்டு இரண்டு கைகளால் நெட்டை வாங்குவதுபோல் மடித்துத் தூக்குவர். அதனால் வயிற்றிரைச்சல் அடங்கும்; பேதி நிற்கும். இதனைத்

தெரிந்து கொள்ளாவிடில் பணநட்டமும் துன்பமும்தான் ஏற்படும். 'குடலேற்றம் தெரியாமல் கோடிப்பணம் செலவழிச்சான்' என்பது பழமொழி.

"குடலேற்றம் என்றிட்டாலும் கண்ணே — கறுப்பி
குடல்தட்டுவான் பயப்படாதே".

படகோட்டிகளின் ஜலசா பாட்டில் சீமைச்சாராயம் கொய்னா பற்றிய செய்திகள் உண்டு. காய்ச்சலுக்கு ஒயின் போன்ற சாராயம் மலேரியாக் காய்ச்சலுக்குக் கொய்னா மருந்து.

"சீக்குக் காரருக்கு ஏலேலோ
சீமைச் சாராயம் ஜலசா".

வாட்டுக்குப் போகாத காய்ச்சல்காரருக்கு என்ன மருந்து கொடுப்பது ?

"கொடுத்திடுவார் ஏலேலோ
கொய்னாத் தானாம் ஜலசா"

இவ்வாறு பாமரர் பாடும் பல பாடல்களில் எளிய மருந்து முறைகள் பொதிந்துள்ளன.

கல்லா — ஒரு பார்வை

கே. பழனிவேலு,
ஆராய்ச்சியாளர்,
தமிழியல் துறை,
புதுவைப் பல்கலைக்கழகம்.

கல்வி என்பதற்குப் பொதுவாகக் கற்றல் (Learning) என்பதுடன் இணைத்துப் பொருள் கூறப்படுகிறது. பிறப்பு முதல் நம்மிடம் இயற்கையாக அமைந்து காணப்படாமல் நாம் பின்னர் பெறும் அனுபவங்களும் அவற்றின் விளைவுகளும் 'கற்றல்' என்பதனுள் அடங்குவனவாம்.[1] இதன் வழி உலகியல் அனுபவங்கள் அனைத்தும் கல்வி என்பதனுள் அடங்கும். கல்வி என்ற சொல்லின் இன்றைய பயன்பாடு அனுபவம் வழிக் கற்றலைக் குறிப்பதன்று. மாறாகப் படித்தல், வாசித்தல் என்ற பொருளிலேயே 'கல்வி' எனுஞ்சொல் வழங்கப்படுகிறது. தமிழ் மொழியகராதி கல்வி என்பதற்கு அறிவு, கற்றல், நூல், வித்தை, எனப் பொருளுரைக்கின்றது. இவற்றில் அறிவு, கற்றல், நூல், என்பன எழுத்துடன் தொடர்புடையன என்பது அறியத்தக்கது. இக்கட்டுரை சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கல்லா என்பதனை ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளது.

சங்க காலத் தமிழ்ச் சமூகம், உயர்ந்த பண்பாட்டினை உடையதாக கடல் கடந்து வாணிகம் செய்ததாக, உயர்ந்த கலைகளைத் தன்னகத்தே கொண்டதாகப் புகழப்படுகிறது. ஆயினும் அச்சமூகத்தில் கல்வி முறைப்படுத்தப்பட்டதொரு நிறுவனமாக விளங்கவில்லை. அக்காலத்திய சமூகத்தில் கல்வி முறைப்படுத்தப்படாமை கல்வி பற்றிய சிந்தனை முழுமை பெறாத நிலையினைக் காட்டுகிறது. சங்க இலக்கியத்தில் கல்வியின் சிறப்பைப் பற்றிய பாடல்கள் காணப்படினும் கற்றல் முறை, கற்பித்தல் முறை பற்றிய செய்திகள் காணக் கிடைக்க வில்லை. கற்பித்தான், ஆசிரியர் பற்றிய குறிப்புகள் காணப் படினும் கற்பித்தல் தனிப்பட்டதொரு தொழிலாக நடைமுறைப் படுத்தப்படவில்லை.

அக்காலத்தில் ஏட்டுக்கல்வி வாழ்வியலுக்கான இன்றி யமையாத் தேவையாக இல்லை. தொழில் முறையில் பெற்ற அனுபவமே வாழ்வியலுக்கு ஏற்றதாக அமைந்திருந்தது. இவ் வனுபவமும் குடும்பத்தில் உள்ள பெரியோர்களால் சூழலுக்

1. சந்தானம், எஸ்., கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள், ப,1

கேற்ப இளையோருக்குக் கொடுக்கப்பட்டது. இதனால் தொழில் முறைக் கல்வி குறைப்படுத்தப்பட்ட அமைப்பாக உருவாக வில்லை. தொழில் புரிவதில் தன் குடும்பத்தாருக்கு உதவுதலின் மூலம் கற்றலாகவே தொழில் கல்வி இருந்தது. தொழில் பயிற்றுவிக்கும் தனிப்பட்ட ஆசிரியர் எவரும் அக்காலத்தில் இலர்.

'கல்லா' என்ற சொல் அறியாத, கல்லாத என்ற பொருள் களில் சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பெற்றுள்ளது.

"மந்திக் கணவன் கல்லாக் கடுவ" (ஐங். 274 : 3)

"கல்லா யானை வேந்துபகை வெலற்கே" (ஐங். 429 : 4)

"கருவிரன் மந்திக் கல்லாவன் பார்ப்பு" (ஐங். 280 : 1)

"கருவிரன் மந்திக் கல்லாவன் பறழ்" (ஐங். 272 : 3)

என விலங்குகளுக்கும்,

"கல்லாக் கோவலர் கோலிற் றோண்டிய" (ஐங். 304 : 1)

"கல்லாவிளையர் மெல்லத் தைவர" (சிறுபாண் : 33)

"கல்லா மாந்தரோடு நகவணர் திளைப்ப" (மது. 420)

என மாந்தருக்கும் 'கல்லா' எனும் சொல் பயின்று வந்துள்ளது. இத்தொடர்களுக்கு உரையாசிரியர்கள் தன்தொழிலன்றி பிற கல்லாத, தனக்குரிய தொழிலை நன்கு கல்லாத, கல்லாத எனப் பொருளுரைக்கின்றனர்.

பறழ், பார்ப்பு முதலியவை இளமைப் பெயர்களாதலால் அவற்றைக் குறிக்கும்போது தனக்குரிய தொழிலையே கல்லாத எனப் பொருளுரைத்தனர். கடுவன், மந்தி, யானை முதலிய வற்றைக் குறிக்கும்போது தனது தொழிலையன்றி பிறகல்லாத, எனப் பொருளுரைத்தனர். இவண் கல்லா எனும்சொல் விலங்குகளுக்கு ஆகி வரும் பொழுதே வேறுபடுவதனைக் காணமுடிகிறது.

'கல்லா' மந்தி, கடுவன் முதலியவற்றிற்கு ஆகிவரும் பொழுது அறியாத, தன் தொழிலன்றி உலகியல் அறியாத எனப் பொருளுரைப்பர். ஆயின் கல்லா யானை என்பதற்குப் பாகனாற் பயிற்றப்படாத, போர்த் தொழிலன்றி பிறகல்லாத, பாகன் கூறுமொழிக் குறிப்பன்றிப் பிறவற்றைக் கற்றறியாத எனப் பொருளுரைக்கின்றனர் யானை தமக்கியல்பான செயல் களுடன் பாகனாற் பயிற்றப்படும் தன்மையது ஆதலால் தன்

தொழிலன்றிப் பிறகல்லாத என்று பொருளுரைத்தல் பொருந்துவதே ஆயினும் போர்த்தொழிலன்றி பிறகல்லாத எனப் பொருளுரைத்தல் ஏற்கத்தக்கதன்று.

"கல்லா வல்வில்" (புறம் 261 : 11) என்பதற்குக் கற்க வேண்டாத வலிய விற்படை எனப் பொருளுரைப்பர். இங்குக் குலத் தொழிலே வில்தொழில் என்றதனால் தனியே கற்க வேண்டாத என்ற பொருள் பட்டது. தன் தொழிலைக் கற்க வேண்டாத அதாவது தன்தொழிலை நன்கு அறிந்த எனும் பொருள்கள் தமக்குரிய கல்வியன தொழில் முறையைப் பயிற்றல் என்ற நிலை இல்லாமையே காட்டுகிறது. அவ் ஓர் அனுபவக் கல்வியே.

"எல்லடி படுத்த கல்லாக் காட்சி
வில்லுழு துண்மார்" (புறம் 170 : 3, 5)

"கடுத்தது பிழைக்குரிய தாயின் தொடுத்த
கைவிரல் கவ்வுங் கள்ளங் காட்சிக்
கொடுமலும் பிடித்த கோடா வன்கண்
வடிநவில் அம்பின் ஓவ லாடவர்" (அகம் 215 : 7-10)

எனும் பாடல்வரிகள் தொழில்முறைக்கல்வி என்பது பார்த்துக் கற்றல் என்ற நிலையில் இருந்ததனைக் காட்டுகிறது. கல்லாத காட்சியை மட்டும் உடைய என்றது தொழில் கற்றலைக் கல்வி என்று ஏற்காததையும் வேறு ஒரு கல்வி இருத்தலையும் காட்டுகிறது.

"கல்லாக் கடுவன் கணமலி சுற்றத்து
மெல்விரல் மந்தி குறைகூறுஞ் செம்மற்றே"
(கலி. 40 : 15, 16)

எனக் கல்லாத ஆண்குரங்கு மந்தியின் சுற்றத்திடம் எனக்கு இவளைத் தருக எனக்கேட்டல் தாழ்வாகப் பேசப்படுகிறது.

"கல்வியென் என்னும் வல்லாண் சிறாஅன்"
(புறம். 346 : 3)

என "யானும் சிறிது கல்வியென்" ஆதலால் மகட்கொடை கேட்கும் உரிமையுடையவன் என்று மகட்கொடை மறுக்கப் பட்ட ஒருவன் தனது பெருமையைக் கல்வியுடன் சார்த்தி உரைக்கிறான். மகட்கொடை மறுத்தல் பல்வேறு காரணங் களால் நிகழ்ந்துள்ளது. மகட்கொடை கேட்டலுக்குக் கல்வி

ஒரு தகுதியாகக் கருதப்பட்டிருக்கவேண்டும். மகட்கொடை கேட்கும் குரங்கினைச் சுட்டும்போது அதன் இழிவு கூறக் கல்லா என்ற சொல் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

விலங்குகளைக் குறித்த பல நிகழ்ச்சிகள் மாந்தருக்கும் ஆகி வருவதனைச் சங்கப் பாக்களில் காணமுடிகிறது. இத்தகு நிலையில் 'கல்லா' விலங்குகளைக் குறிக்காமல் மனிதனையே குறித்தது. ஆகவே தன் தொழிலன்றிப் பிற கல்லா எனப் பொருளுரைத்தல் ஏற்புடைத் தன்று. இங்குச் சுட்டப்படும் கல்வி ஆய்வுக் கல்வியாக, ஏட்டுக் கல்வியாக இருக்கலாம்.

'கல்லா' என்ற சொல் மாந்தர்க்குப் பயின்றுவரும்போதும் தனக்கு இயல்பாகிய தொழிலைத் தவிர பிற கல்லாத என்றே பொருளுரைத்தனர். இது பொருந்துவதன்று. கல்வியின் பெருமையைப் புகழ்த்திப் பேசும் காலத்தில் 'கல்வி' என்பது ஏட்டுக் கல்வியையே குறித்திருக்கவேண்டும்.

சங்க காலத்தில் கல்வி உயர்வு தாழ்வின்றி அனைவருக்கும் பொதுவான நிலையில் இருந்துள்ளது. எக்குலத்தைச் சார்ந்தோரும் எத்தொழில் புரிவோரும் கல்விபெறலாம் என்ற நிலை இருந்தது. இதனைச் சங்கப்புலவர்களின் பெயர்ப்பட்டியல் விளக்கி நிற்கிறது. சங்கப்புலவர்களில் நற்பத்தெழுவர் தொழிலால்பெயர்பெற்றவராவர். பாண்டியன் நெடுஞ்செழியனின் பாடல் குலவேறுபாடின்றிக் கல்வி கற்றதனைப் புலப்படுத்து கின்றது. இத்தகு சூழலில் கல்லா என்பதற்குத் தம்தொழிலன்றிப் பிற கல்லா எனப் பொருளுரைத்தல் பொருத்தமுடையதன்று.

ஒருவன் தனது குலத்திற்குரிய தொழிலைக் கற்க எவரிடமும் என்று பயிலவேண்டிய தேவையில்லை. மாறாக, வேறொரு தொழிலைப் பயிலவேண்டுமெனில் அத்தொழிலைக் கற்பிக்க ஆசிரியர் ஒருவர் வேண்டுவது இன்றியமையாததாகிறது. பிற தொழிலைக் கற்பிக்கும் ஆசிரியர் சங்க காலத்தில் இருந்தமைக் கான சான்றுகள் இல. தொழில் முறைக்கல்வி கல்வியாகக் கருதப்படாததினாலேயே அதனைக் கற்பிக்கும் ஆசிரியர் எவரும் இலர் எனலாம். இங்குத் தன் தொழில் கற்றவனும் கற்றவனாகக் கருதப்படாதது எண்ணத்தக்கது.

"முல்லை சான்ற கற்பின் மெல்லியல்
மடமா னோக்கின் வாணுதல் விறலியர்
நடை மெலிந்தசைஇய நன்மென் சீறடி
கல்லா விளையர் மெல்லத் தைவர" (சிறு. 30—34)

என்கிறது சிறுபாணாற்றுப்படை. இங்குக் காட்டப்படும் இளையன் பாண்சுற்றத்தினன் அச்சுற்றத்தின் இளையன் தனது கலைத்தொழிலுக்கும் இளையன். அவன் விறலியின் அயர்வுபோகக் கால்களை வருடுதல் ஏற்புடைத்து. இங்குக் 'கல்லா' என்பதனுக்குக் கலைத்தொழிலை முழுமையாகக் கல்லாத இளையனெனப் பொருள் கொள்ளலாம்.

"கல்லாக் கோவலர் கோலிற் றோண்டிய" (ஐங் 304 : 1) எனும்போது கல்லா என்பதற்குத் தன் தொழிலைக் கல்லாத எனப்பொருள் கூற இயலாது. அவர்க்குரிய தொழிலைப் பிழையறச் செய்பவர்களாகக் கோவலர் காட்டப்பெறுகின்றனர்.

இளமையில் கல்வி கற்பிக்கப்பட்டதனைச் சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன.[1] இளமையிற் கல்லாதவனின் நிலை இரங்கத் தக்கதாகக் காட்டப்படுகிறது[2]. கற்றல், கல்வி என்பன தொழிலை அறிதல் என்ற நிலையிலிருந்து எழுத்து, நூல் அறிதல் என்ற நிலைக்காகி வந்ததனை இவை உணர்த்துகின்றன. அதுவரை தொழிலில் மட்டும் ஈடுபட்டிருந்தவர்கள் நூல்களைக் கற்கத் தொடங்கினர். இந்நிலையில் 'கல்லா' என்ற தொடர் 'நூல் கல்லாத' என்ற பொருளிலேயே பயின்று வந்திருக்க வேண்டும். சொல், பொருள், கணிதம், மறை பற்றிய நூல்கள் இருந்துள்ளன. அந்நூல்களைத் துணையாகக் கொண்டு அரசன் ஆட்சி செலுத்தினான்[3] எனப் பதிற்றுப்பத்து கூறுகிறது. நூல் கற்றறிந்தவர்களைப் பற்றிப் புகழும் பாடல்களும், பழைய நூல்களைப் பற்றிய செய்திகளைத் தாங்கிய பாடல்களும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இந்நிலையில் கல்வி தொழில் கற்றலைக் குறிக்காமல் நூல் கற்றலையே குறித்திருக்க வேண்டும். இந்நூல்கள் ஒழுக்க உணர்வை அறிவிப்பனவாகக் கருதப்பட்டன.

"... வல்லுப் பலகை யெடுத்து நிறுத்தன்ன
கல்லாக் குறள கடும்பகல் வந்தெம்மை
யில்லத்து வாவென மெய்கொளீஇ யெல்லாநின்
பெண்டி ருளர் மன்னோ கூறு" (கலி. 94 : 13-16)

எனக் கலித்தொகை கல்லாத ஒருவனின் இழிசெயலைக் காட்டுகிறது. உரையாசிரியர் கல்லா என்றதனுக்கு "மகளிரைக்

1. குறு. 33 : 1;
2. புறம். 243 : 10—11
3. பதிற்று. 71:1-3;

கூடும் முறையைக் கல்லாத” எனப் பொருளுரைப்பர். இது மகளிரைக் கூடும் ஒழுக்க நெறியைக் கல்லாத எனும் பொருள் பெற்றது. இங்குக் கல்வி ஒழுக்கம் அளிப்பதாகக் கருதப் பட்டமை அறியத்தக்கது. கல்வியினால் ஒழுக்கம் பெற்றிருப் பானாயின் குறளன் தகாத முறையில் நடந்து கொண்டிருக்க மாட்டான் என்பதையே 'கல்லாக் குறளன்' என்ற தொடர் குறிக்கிறது. ஒழுக்கத்தை அளிக்கும் இக்கல்வி அறநூல் கல்வி யாக இருந்திருக்கவேண்டும். அறநூல்களைப் பற்றிய பல குறிப்புகள் சங்க நூல்களில் காணப்படுகின்றன.[4] இந்த அற நூல்கள் எவை எனத் தெளிவாக அறிய இயலவில்லை. ஆயினும் நூல்கற்றல் என்பது அறநூல்களைக் கற்றல் என்ற நிலையில் இருந்திருக்கலாம்.

கல்வி கற்றவர்கள் அறிவாளிகளாக மதிக்கப்பட்டனர். கற்றவர்களின் அறிவு மிகுத்துப் பேசப்பட்டது. இதனால் கற்ற-வன் அரசனுக்கு ஒப்பாக, அரசனுக்கும் உயர்வாக மதிக்கப் பட்டான். அறிவுடையோன் வழி அரசும் சென்றதனால் இளமையில் கல்லாதவனின் நிலை இரங்கத்தக்கதாக காட்டப் பட்டது. இக்காலகட்டத்தில் நூல்கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் உருவாகத் தலைப்பட்டனர். இவர்கள் அறநூல் களை மாணவர்களுக்குப் பயிற்றுவித்திருக்க வேண்டும். இவ்வாசிரியர்கள் தொல்லாணை நல்லாசிரியர் எனப் புகழப் பட்டனர். இவர்கள் ஒன்றுகூடி வாதிட்டனர். “புகார் நகரத்துக் கட்டப்பட்ட கொடிகளுள் பல்கேள்வித் துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியர் வாதிடுவது கருதி உயர்த்திய கொடியும் ஒன்று” என்கிறது பட்டினப்பாலை”[5].

நூல்கல்வி தோன்றாத நிலையில் 'கல்லா' என்ற சொல் தன்தொழில் கல்லாத என்ற பொருளில் பயன்படுத்தப் பெற்றிருக்கலாம். விலங்குகளுக்குக் 'கல்லா' என்ற சொல் பயின்று வந்தது இவ்வடிப்படையில் தான்.

கல்வியின் பெருமையைப் பேசும் காலகட்டத்தில் கல்வி அறிவு நிலையைத் தரவல்லது என்ற கருத்துருவம் தோன்றிய காலகட்டத்தில் 'கல்லா' எனும் சொல் தமக்குரிய தொழிலைத் தவிர்த்து பிற கல்லாத எனும் பொருளில் அன்று நூல்களைக் கல்லாத எனும் பொருளிலேயே பயிலத் தொடங்கியிருத்தல் வேண்டும்.

---

4. புறம். 15:17-21;
5. பட். 166 - 171.

முதறிஞர் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகன் (வாழ்க்கைக் குறிப்புகள்)

வி. சா. பாலசுப்ரமணியன்,
தமிழ் விரிவுரையாளர்,
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி,
தஞ்சாவூர் - 613 005.

தமிழ்நாடு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி, உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி மு. மு. இஸ்மாயில், தவத்திரு குன்றக்குடி அடிகளார் போன்ற பலருக்கும் ஆசானாக விளங்கிய பெருமை கொண்ட மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகரின் மறைவு (25—4—1990) தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஓர் அதிர்ச்சி தரும் செய்தி. தமிழ், சமற்கிருதம், ஆங்கிலம், ஆகிய மொழிகளில் இவர் ஆழ்ந்த புலமைபெற்றவர். திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் போன்ற நூல்களில் இவரது ஆராய்ச்சி முதலியவைகளுக்கு உறுதுணையாகவிருந்தது இவர் பெற்றிருந்த சமற்கிருத அறிவே. 1928 இல் சிதம்பரம் மீனாட்சி கல்லூரியில் தொடங்கிய இவரது ஆசிரியப்பணி 1989 இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நிறைவுற்றது.

உ. வே. சா. ஏற்படுத்திய மரபு :

பொன் ஓதுவா மூர்த்திகள், யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் மாணவர் வழி வந்த ம. க. வேல் பிள்ளை, முதுபெரும்புலவர் டாக்டர் உ. வே. சா. ஆகிய பெரும் ஆசிரியர்களிடம் பாடம் கேட்ட பெருமை இவருக்குண்டு. தம் ஆசிரியர்களை தம் நூல்களில் ஆங்காங்கே நினைவுகூர்வது தேசிகரின் வழக்கங்களில் ஒன்று. சான்றாக '' அதன் பின்னர் 1922 ஆம் ஆண்டு ஆசிரியப்பெருந்தகை சு. பொன்னோதுவா மூர்த்திகளிடம் மகாமகோ பாத்தியாய ஐயர் அவர்களிடமும் வித்துவான் தேர்வுக்காக பாடம் கேட்கும் புண்ணியம் கிட்டியது' என்று இவர் சுட்டுதல் காண்க.[1]

தன் ஆசிரியர் உ. வே. சா. போலவே எந்த ஒரு தமிழ் இலக்கண அல்லது இலக்கிய நூலை இவர் பதிப்பித்தாலும் அவற்றுள் ஆராய்ச்சி முன்னுரை, அருஞ்சொற்களின் அகராதி-முதலியவற்றையும் சேர்த்து வெளியிடுவார். (இவர் எழுதிய பெரும்பாலான நூல்கள் இவரால் பதிக்கப்பட்டவையே) உ. வே. சாவிடம் இவருக்கு அடுத்து (ஜூனியர்) மாணவராக

விளங்கியவர் கி. வா. ஜகன்னாதன். சிலமாதங்களுக்கு முன்னர் அவரும், இப்போது இவரும் காலமானதால் உ. வே. சாவின் மரபுவழி மாணாக்கர் பரம்பரை நிறைவுகிறது எனலாம்.

கல்வி : சிதம்பரம், ஆறுமுகநாவலர் உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை பயின்ற இவர், திருவையாறு அரசர் கல்லூரியில் சேர்ந்து கற்கப்புகுந்த மொழி சமஸ்கிருதமே. மூன்றாண்டுகள் அங்கு இவர் மூதணபதஞ்சலி, க்ஷணகவி, நாராயண சாஸ்திரி ஆகியவர்களிடம் அம்மொழி பயின்றார். அச்சமயம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் முன்னோடியாக விளங்கிய மீனாட்சி கல்லூரி தொடங்கப்படவே தேசிகர் அங்கு தமிழ்வித்துவான் வகுப்பில் சேர்ந்து, மாநிலத்திலேயே முதல் மாணவராகத் (1928) தேர்ச்சி பெற்றார். அதன்பயனாக அதே மீனாட்சி கல்லூரியில் இவர் ஆசிரியராகப்பணியமர்த்தம் செய்யப்பெற்றார். அப்போது உ. வே. சாவுடன் பணியாற்றும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. பின்னர் உ. வே. சா இவருக்களித்த சான்றிதழ் ஒன்றில் "சிரஞ்சீவி வித்வான் ச. தண்டபாணிதேசிகரைப் பத்து வருஷங்களுக்கு மேல் அறிவேன். நான் மீனாட்சீ தமிழ்க் காலேஜில் இருந்த காலத்தில் சில வருஷங்கள் இவர் வித்வான் பரீட்சைக்காகப் படித்தார். அக்காலத்தில் இவருடைய அறிவின் திறத்தை நான் அறிந்து மகிழ்ந்ததுண்டு. மற்ற பிள்ளைகளினும் இவர் சிறந்து விளங்கினார். அதற்கேற்ற படியே வித்வான் பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்றார்.

இவர் நல்ல ஞாபகசக்தியும், இலக்கண இலக்கியங்களில் சிறந்த பயிற்சியும், நூலாராய்ச்சி வன்மையும் உடையவர். விஷயங்களை ஆராய்ந்து எழுதும் ஆற்றலும், சபையிற்பேசும் சக்தியும் இவர் பெற்றிருக்கிறார். மாணாக்கர்களுக்குப் போதனை செய்வதிலும் இவர் வல்லவர். இவருடைய நற்குண நற்செய்கைகள் இவரிடத்து யாவருக்கும் பிரியத்தை உண்டுபண்ணும். இவருடைய அபிவிருத்தியில் எனக்கு எப்பொழுதும் சிரத்தை உண்டு".

இங்ஙனம் (ஒப்.)
வே. சாமிநாதையர்
16—11—1936
(உண்மை நகல்)

குறித்தல் காணலாம் 2.

பல்கலைக்.கழகங்களில் தேசிகர் :

மீனாட்சி கல்லூரியிலிருந்து இவர், நாகப்பட்டினம் தேசிய உயர்நிலைப்பள்ளி, திருவாரூர், குடவாயில் மாவட்டக்கழக உயர்நிலைப்பள்ளிகளில் சில காலம் பணியாற்றிவிட்டு (1930 – 1944) திருப்பனந்தாள் தமிழ்க்கல்லூரியில் விரிவுரையாளரானார். அடுத்து தருமபுரம் ஆதீனம் தமிழ்க்கல்லூரியிலும் (1951 – 1954) பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் திருக்குறள் ஆய்வு மையத்திலும் பணிபுரிந்தார். அங்கு தமிழ் விரிவுரையாளராக இருந்துவிட்டு, நாகப்பட்டினம் கனகசபை பிள்ளை தமிழ்க்கல்லூரியில் (1974 – 1976) முதல்வர் ஆனார். பிறகு மதுரை காமராசர் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆய்வகத்தில் 1989 வரையில் பணிபுரிந்தார்.

திருக்குறளில் ஆய்வுச்சிறப்பு :

தமிழில் சிறப்புமிக்க நூலாக விளங்குவது திருக்குறள். அதற்கு இவர் ஆற்றியபணிகள் பல. தருமபுரம் ஆதீனம் தமிழ்க்கல்லூரியில் இவர் இருந்த சமயம் "திருக்குறள் உரைவளம்" என்ற பெயரில் முப்பாலையும் தனித்தனி நூலாக (1950—52) எழுதினார். இதனை வெளியிட்டபெருமை தருமபுரம் 25 ஆம் குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணியதேசிகருக்கே உரியது. பழைய குறள் உரைகள் பத்தினையும் தொகுத்த நூல் மட்டுமல்ல இது. ஆராய்ச்சி முன்னுரை, ஒப்புமைப்பகுதி (பற்பல தமிழ் இலக்கணங்களில் உள்ள குறள் கருத்து அமைந்த பகுதிகளுடன்) இவரது குறள் (பொழிப்பு) தொகுப்புரைகள், அடிக்குறிப்பு அருஞ்சொற்கள் — பொருள் அகராதி முதலியவற்றுடன் கூடிய உயரிய நூல் உரைவளம் இதற்கு முன்னரும், பின்னரும் இத்தகைய சிறப்புக் கூறுகளுடன் திருக்குறள் பதிப்பு வெளிவந்திலது எனலாம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவர் இருந்த சமயம், வள்ளுவத்தில் மெய்ப்பொருட் சுவடுகள், காப்பியங்களில் திருக்குறள், வள்ளுவரும், கம்பரும் முதலிய மூன்று அரிய நூல்கள் எழுதினார். (திருக்குறள் அழகும், அமைப்பும் என்ற நூல் இவரது காமத்துப்பால் உரை வளத்தில் இடம் பெற்ற ஆராய்ச்சி முன்னுரையே)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் சார்பில் இவரது திருக்குறள் உரைக்களஞ்சியம் வெளிவந்துள்ளது. பதின்மர்

உரையே அன்றி, தற்சமயம் குறளுக்கு அமைந்துள்ள திரு. வி. க. முதலியவர்களின் உரையெல்லாம் ஒருசேர இடம் பெறுகிறது. (அவற்றுள் எவ்வுரை சிறந்தது என்று ஆராய்ந்து தேசிகர் ஒவ்வொரு குறளுக்கும் நடுநின்று பொருள் காண்பது இந்த நூலின் சிறப்பு என்பது குறிப்பிடத்தக்கது) பழைய உரைகளையே அன்றி, தற்கால ஆசிரியர்களின் குறள் உரைகளையும் இவர்போற்றுவது, இவரது சிறந்த பண்பிற்கு ஓர் அடையாளம்.

இலக்கியப் பணி

திருக்குறள் பணிகள் தவிர இவரது இலக்கியப்பணிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

அ) கட்டுரை நூல்கள் :

1) அருளும் ஆற்றலும் 1967 (திருவாவடுதுறை)
2) அமைதி (ஆண்டு பற்றிய குறட்பிச்சை) (தருமபுரம்)
3) அன்பு தந்தருள (1968) (திருவாவடுதுறை)
4) அன்னையின் அருள் (1966) ,,
5) சைவத்தின் மறுமலர்ச்சி (1950) ,,
6) தோன்றினார்கள் (1964) ,,
7) நக்கீரர் (1973) (அண்ணாமலைப்பல்கலைக் கழகம்)
8) திருநீறு (1955) (தருமபுரம்)
9) உருத்தி ராக்சம் (1954) முதலியன (தருமபுரம்)
10) சைவத்தின் இருகண்கள் (திருவாவடுதுறை)

ஆ) பயண நூல்கள் :

1) காசியாத்திரை (1951) (தருமபுரம்)
2) இராமேசுவர யாத்திரை (1952)

இ) தாள சரித்திரம்:

1) சச்சபுடவெண்பா (தருமபுரம்)

ஈ) சொற்களஞ்சியம்:

1) சங்க இலக்கியச் சொற்களஞ்சியம் (அமுதல் ஔமுடிய) (திருவாவடுதுறை)

உ) படைப்பிலக்கியம்- சிற்பநூல்:

1) கணபதி (பட விளக்கத்துடன்) (திருவாவடுதுறை)
2) முருகன் ,, ,,
3) ஆடல் வல்லான் ,, ,,

ஊ) தலவரலாறுகள்:

1) ஆதீனத் திருக்கோயில்கள் தருமபுரம்
2) சிதம்பரம் ,,
3) திருவாரூர் ,,
4) திருநள்ளாறு (திருநள்ளாறு தேவஸ்தானம்)
5) திருச்செங்காட்டாங்குடி (திருச்செங்காட்டாங்குடி)
6) மதுரை (தருமபுரம்)
7) கும்பகோணம் (நாகேஸ்வரர் தேவஸ்தானம்)
8) வேதாரண்யம் (வேதாரண்யம் தேவஸ்தானம்)

எ) உரை எழுதிய நூல்கள்:

1) அபிராமி அந்தாதி (விருத்தியுரை) (தருமபுரம்)
2) பண்டார சாத்திரங்கள் (பதினான்கு) (திருவாவடுதுறை)
3) திருக்கோவையார் (உண்மை விளக்கம் என்னும் உரை) (திருவாவடுதுறை)
4) திருவாசகம் — குறிப்புரை (தருமபுரம்)
5) திருவாசகம் — பேருரை (குருவருள் விளக்கம் உரை) (திருவாவடுதுறை)
6) திருமந்திரம் (எட்டுதந்திரம்) (திருவாவடுதுறை)
7) திருஞானசம்பந்தர் தேவாரம் (குறிப்புரை) (தர்மபுரம்)
8) நன்னூல் (மாதவச் சிவஞான முனைவர் உரை குறிப்புரை திருவாவடுதுறை)

- (இவர் எழுதிய வேறு நூல்கள் இக்கட்டுரையாசிரியர்க்குக் கிடைத்தில)

ஏ) இவர் பெற்ற பட்டங்கள் விவரம்:

1) இலங்கை கண்டியில் புத்தரின் 2500 ஆண்டு விழாவின் போது "உரைவளம்" ம. பொ. சி தலைமையில்
2) குன்றக்குடி ஆதீனம் — "முதுபெரும் புலவர்" தலைமையில்
3) மதுரை ஆதீனம் — "சித்தாந்தப் பேராசிரியர்" தலைமையில்
4) தருமபுரம் ஆதீனம் — "ஆதீனவித்துவான்" தலைமையில்
5) திருவாவடுதுறை ஆதீனம் — "மகாவித்துவான்" தலைமையில்

6) குளித்தலை காசுபிள்ளை நினை இலக்கியமன்றம் "உரைவளர்த்திருவள்ளுவர்"
7) தமிழ்ப்பல்கலைக்கழகம் டி லிட் (1984)
8) கோவை மக்கள் — 1983 இல் பல விழா எழுத்தர்
9) மதுரை பல்கலைக்கழகம் — தமிழ்ச்செம்மல் கலைஞர் மு. கருணாநிதி தமிழ்நாடு முதல்வர் தலைமையில் வழங்கியது.
10) இந்திய அரசு — "பத்மபூஷண்" (1990)

பக்தி மிக்கவர் :

இவர் சக்தி உபாசகர். மதுரை மீனாட்சி அம்மனிடம் அளவற்ற பக்தி இவருக்கு. நாள்தோறும் இவர் சிவபூஜை செய்யும்போது, அபிராமி அந்தாதி. மீனாட்சி அம்மன் பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் பலவற்றையும், மந்திரத்தையும் மனமுருகப் பாடுவார். இடையறாத மனப்பயிற்சி, எழுத்து, எளிமை, தீய பழக்கம் ஏதுமில்லாத தூய ஒழுக்கம், பக்தி முதலியவை இவரை உயர்த்தின இதற்கெல்லாம் காரணம் (30—8— 908) இவர் பிறந்த பக்தி மிக்க குடும்பமும், இவரது மனைவியார் திருமதி தர்மாம்பாள் அம்மையாருமே.

சான்றெண் விளக்கம் :

1) தண்டபாணிதேசிகர் ச. மகாவித்துவான், திருக்குறள் உரைவளம், தருமபுரம் ஆதீனம் (1951) பொருட்பால் முகவுரை பக்கம் 9.

2) உ. வே சா. ச. தண்டபாணிதேசிகருக்கு அளித்த ஒரு சான்றிதழ் இக்கட்டுரையாசிரியரிடம் தேசிகர் கையளித்தது.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

ஓசை ஒலியெலாம்........
" Noise Pollution "

பேராசிரியர், வி. அ. இளவழகன்,
எம்.எஸ்சி., எம்.ஃபில்.,
வேதியற் துறை,
அ. வீ. வா நி திரு புட்பம் கல்லூரி, பூண்டி.

பெண் பயணி : ஏம்ப்பா இங்க முறுக்கு கண்டியிலேந்து செஞ்சுவந்ததா ? இல்லே கெண்டி மாதிரி இருக்குமா ?...

2வது விற்பனையாளர் : ம்ம் கொஞ்சம் இப்படியே உட்கார்ந்திருங்க ! உங்களுக்கு ஜப்பான் - லேந்து முறுக்கு வரும், சீக்கிரமா அனுப்பச் சொல்லியிருக்கேன்...

3வது விற்பனையாளர் :
" பாப் கார்ன் ! "... " பாப் கார்ன் ! "...

சிறுமி : ஏம்மா ?... யாரோட பாப்பாவை காணல்லே ? இவரு, ஏன், 'பாப்பாவைக் காணோம்' 'பாப்பாவைக் காணோம்' ன்னு சத்தம் போட்டுக்கிட்டு போறாரு ?

அம்மா : யாரும் காணப்போகலை !... சோளப்பொரின்னா யாரும் வாங்க மாட்டாங்கன்னு 'பாப் கார்ன்' னு இங்கிலீசுல்லே சத்தம் போட்டுப் போறாரு !... (எங்கிருந்தோ வந்த நடத்துனர் வண்டிக்குள் தாவி ஏறி, " ரைட், ரைட்... போலாம் !" என குரல் கொடுக்க ஓட்டுனர் வண்டியை திடீரென கிளப்புகிறார்)

நடத்துனர் : இந்தாப்பா ! இஞ்சிமரபா கண்டி முறுக்கு, சோளப்பொரி எல்லோரும் வண்டியை விட்டு இறங்குங்க ! நாணயமா உள்ளவங்க எல்லோரும்நாணயமா கொடுத்து சீட்டு வாங்குங்க. எங்கிட்டே சில்லரை இல்லே !... (இடையிடையே ப்திவு நாடா அலற... மாணவர்கள்,பயணிகள் கத்த... பேருந்து என்ஜின் அதிர... ஒலிஎழுப்பிகள் ஒலி எழுப்ப... இரைச்சல்... இரைச்சல்...)

1வது பயணி : அப்ப்ப்பா... ஒரே கூச்சல் நெருக்கடி... வியர்வை வாடை... மூச்சு திணறுது... இதுக்குத்தான் டவுன்

வண்டியிலே வரக்கூடாது... உஸ்... அப்பாடா... புளிப்-பானையிலே திணிச்ச மாதிரி இருக்கு. காட்டுச்சத்தம் காதை அடைக்குது.

2வது பயணி: அப்போ, நீங்க ரூட் வண்டியிலே போக வேண்டியதுதானே?...

1வது பயணி: அட! நீங்க வேற! ரூட் வண்டியிலே சீட்டு ஒரு ரூபா நாப்பது காசு. ஆனா டவுன் வண்டியிலே ஒரு ரூபா 20 காசு.

2வது பயணி: 20 காசு தானே அதிகம்! சலவை கலையாமே சுகமா, இடிபடாமே போகலாமில்லே! வெள்ளையுஞ் சள்ளையுமா போறதை உட்டுபுட்டு......

1வது பயணி: விவரம் புரியாத பேர்வழியா இருக்கியே!... போறப்ப 20பைசா, வர்றப்போ 20பைசா ஒரு நாளைக்கு 40 பைசா அதிகம், ஒரு வாரத்துக்கு 2 80 பைசா பத்து நாளைக்கு 400 பைசா; ஒரு மாசத்துக்கு 1200 பைசா.. ஒரு வருடத்-துக்கு...... ஏனுங்க பக்கத்திலே இருந்த ஆள் எங்கே காணோம்?...

3வது பயணி: வண்டியிலேந்து அவர் குதிச்சு, ஒடி, பத்து நிமிஷம் ஆவுது! உங்களோட புள்ளி விவரங்களுக்கு அவரை விரட்டிடுச்சு போங்க!... ...

இவை போன்று, நித்தம் நித்தம், நாம் காணுகின்ற காட்சிகள் எத்தனையோ?... நெஞ்சில் நிலைப்பவைதான் எத்தனை?

விடிகாலை பொழுதில் சிறகடித்துப் பறக்கும் பறவைகளின் ஒலி, கிளிகள், குயில்கள், தேன்சிட்டுக்கள், குருவிகள் இவை எழுப்பும் ஒலி குழல், யாழ், கின்னரி இவற்றின் இனிமையோடு ஒத்தவை. செவிக்கு இனியவை, இயற்கையிலே நமக்குக் கிடைக்கும் இன்னிசை விருந்து. சாதாரண மக்களின் சாம்ராச்சியத்தில் அவையெல்லாம் அரசவைக் கலைஞர்கள், கைம்மாறு கருதாமல், காசை எதிர்பாராமல் இயற்கை வழங்கி வரும் கவின்கலை மன்றம், அவை!

மாறாக அந்த நாள் அரசர்களாக நாம் இருந்திருந்தால்! ... ... அரசன் உறங்கும் படுக்கையறை! படுக்கையறையின்

வெளியே யாழ் வாசிப்போர்; சற்றுத்தொலைவில் குழல் இசைப் போர்; தொலைவில் முழவு மத்தளம் இயக்குவோர் — என நரம்புக் கருவிகள், துளைக்கருவிகள், தோல்கருவிகள் கொண்டு இன்னிசை எழுப்புவர். அரசனின் உறக்கமும் மெல்ல மெல்ல இனிதே கலையும்! ... வைகறைப் பொழுதில் துயில் எழுப்பிய முறையும், அரசன் கண் விழித்த விதமும் அலாதிதானே! ...

அப்படியில்லாது, பத்தடி உயரத்திற்கு பத்துப் பதினைந்து தகர டப்பாக்களை தட தடவென தள்ளி விட்டால் ... இதயத் துடிப்பு கூட நின்று போகலாம், அல்லவா?

குழந்தைப் பருவத்திலிருந்தே மனிதன் இன்னிசைக்கு தன் வயப்பட்டு விடுகிறான். செவிக்கு இனிய ஒலி ‘இசை’ (Music) எனவும், செவி ஏற்காத ஒலி ‘இரைச்சல்’ (Noise) எனவும் அழைக்கப்படுகிறது. இசைக்கு ஆட்படாத மனித இனமே இல்லை எனலாம். மனிதர்கள் மட்டுமா? விலங்கின மும் அப்படித்தான்.

தாய்மார்கள் எப்போதும் குழந்தைகளைத் தங்களது இடது மார்புக்கருகே அணைத்தவாறே இருப்பதை நாம் கண்டிருப்போம். குழந்தையின் தலைப்பகுதி தாயின் இடதுமார்புக் கருகேயும் கால்பகுதி வலதுமார்பகத்தேயும் தாங்கப்பட்டு, குழந்தை உறங்குவது உலகெங்கிலும் காணப்படும் பொதுவான காட்சி! மனித உறுப்புகளில், வலப்புற உறுப்புக்களே, பெரும்பாலும், அதிக வலு வாய்ந்தவை குழந்தைகள் சாதாரண நிலையில் இருக்கும்போதும், அழும்போதும், உறங்கச் செய்ய அல்லது அழுகையை நிறுத்த தாய்மார்கள் குழந்தைகளை எப்போதும் அவற்றின் தலைப்பகுதி இடதுபுற மார்புக்கருகே வைத்து அணைப்பதுதான் வழக்கம். பன்னாடுகளில், பல்வேறு இன மக்களிடையே, இது குறித்து ஆய்வு நடத்தப்பட்டது, தாய்மார்களின் இடது நெஞ்சருகே தலை வைத்து தாலாட்டப் படும் குழந்தைகளே விரைவில் உறக்கத்தில் ஆழ்ந்து விடுகின்றன, என்பதே ஆய்வின் ஒட்டு மொத்தமான முடிவு.

நம் எல்லோருக்கும், நெஞ்சின் இடது பக்கத்தில் இதயம் உள்ளது, ஓய்வின்றி, எந்நேரமும் செயல்படுகின்ற மனித உறுப்பு, இதயந்தான். “லப்,” “டப்” என இதயம் இடைவிடாது ஒலித்து இயங்கிக் கொண்டேயிருக்கிறது. இதய ஒலி நின்றுபோனால் மனித வாழ்வு முடிந்து விட்டதாகப் பொருள். ஆக, தாயின் இதய ஒலியே, குழந்தைக்கான இனிய தாலாட்டுப்

பாடலாக, குழந்தையை உறங்க வைக்கும் இன்னிசைப் பாடலாகப் போய்விடுகிறது. அதுமட்டுமன்று! தாயின் கருவறையில் இருக்கும்போதே, தாயின் இதயத்துடிப்பை குழந்தை உணர்ந்து விடுகிறது.

ஒலியும், ஓசையும் நம்மை என்ன செய்துவிடும்? உறங்க வைப்பதோடு கிறுகிறுக்கவும் வைக்குமா? ... நீர்வீழ்ச்சியின் பேரிரைச்சல், சிமெண்ட் ஆலையின் பேரொலி, நெல் அல்லது மாவு அரைக்கும் எந்திரத்தின் கொடூரம், பேரோசை இவற்றைக் கேட்டபடியே நிம்மதியாக உறங்க முடியுமா? .. அவ்வளவு தூரம் போவானேன்? ... யாருமே இல்லாத மிகப்பெரிய மாளிகையில் நள்ளிரவில் பெரிய கடிகாரத்தின் 'டிக்' 'டிக்' ஓசை மசை போடாத மாட்டு வண்டியின் ஓசை, சுவற்றுக் கோழியின் 'கிர்றீச்' ஒலி ... இவை ஏற்படுத்தும் திகில் ... அச்சுறுத்தல் ... மருட்டல் ... அப்பப்பா! பட்டவர்களுக்கே அந்த பாடு தெரியும் இல்லையா?

வளர்ந்து வரும் எந்திர, அறிவியல், தொழில்யுகத்தில் பேரொலியும், பேரிரைச்சலும் மனிதனை நிழலாகத் தொடர்வது உண்மைதான் என்றாலும், ஒலி என்றவுடன் "வேதனையும் சோதனையும்" என்ற எண்ணம் எழுவது! இயல்பே, அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு! அவ்வாறே ஒலியும். தாங்கும் அளவையும், ஏற்கும் எல்லையையும் தாண்டி விட்டால் ஒலியும் தொல்லைதான், மாசுதான்! கழிவுகளால் ஏற்படும் நல்வாழ்வுக் கேட்டை நாம் அறிவோம். சிமெண்ட் ஆலையின் சாம்பல் கழிவு, தோல் பதனிடுந் தொழிற்சாலையின் நீர்க்கழிவுகள், சர்க்கரை ஆலையின் நீர்க்கழிவுகள் ஆகியன ஏற்படுத்தும் கேடுகளும், பாடுகளும் (Hazards & Problems) நம் கண்ணுக்குத் தெரிந்தவை. ஆனால் ஒலி மாசுகளால் ஏற்படும் விளைவுகள் அப்படியன்று. கண்ணுக்குப் புலப் படாதவை காலப் போக்கில் கொல்பவை.

சங்கத் தமிழ் இலக்கியங்களான அகநானூறும் கலித்தொகையும் காட்டுகின்ற காட்சி ... இதோ! ... அசுணம் என்றொரு பறவை. யாரும் எளிதில் பிடிக்க முடியாத பறவை. ஆனால், யாழின் நரம்புகளை நெருடி இன்னிசை எழுப்பினால் போதும் இன்னிசையை நாடி, ஓடி வந்துவிடும். யாழிசை தொடரத் தொடர அசுணப் பறவை மயங்கும். செயலிழந்து கிறங்கும் உடனே உயிருடன் அதைப் பிடித்து விடுவார்களாம். இனிய யாழொலியை திடீரென நிறுத்தி விட்டு தடதடவென

கொடிய பறையொலி கிளப்ப, அசுணப்பறவை அதே இடத்தில், அந்தக் கணத்திலேயே சுருண்டு விழுந்து இறந்துவிடும். இன்னிசைக்கு மயங்கிக் கிறங்கும் பறவை, கொடூர ஒலியால் இறந்து போவதின் காரணம் ... பேரிரைச்சலால் ஏற்படும் சுற்றுப்புற மாசுதான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா ? ... பறவைகளுக்கே இந்த நிலையென்றால், கொடூர ஒலியால் மற்ற உயிரினங்களுக்கு ஏற்படும் விளைவுகள் விபரீதமானவை அல்லவா ? ...

ஒலிச்செறிவு (Indensity of sound) டெசிபெல் (dB) என குறிக்கப்படுகிறது. சருகுகள் காற்றிலே சலசலக்கும்போது 10 டெசிபெல், நம்முடைய ரகசிய முணுமுணுப்பு 20 டெசிபெல், உரத்தப் பேச்சு 70 டெசிபெல், நாம் பயணப் செய்யும் பேருந்து 80 டெசிபெல், வெடிச்சத்தம் 100 டெசிபெல், உயர் ஒலி மிஞ்சும் விமானம் 140 டெசிபெல்,— என ஒலிச்செறிவு அளவிடப்பட்டுள்ள. ஆனால், மனிதச்செவியின் இயல்பான ஒலி ஏற்புத்திறன் 60 டெசிபல்தான். எனவே 60 டெசிபல் ஒலிச்செறிவைத் தாண்டி ஏற்படும் இரைச்சல் ஒலி மாசுதான்.

தொழிற்புரட்சி ஏற்பட்ட ஆரம்ப கால கட்டங்களில் ஒலிக் கேடு அல்லது ஒலிமாசு என்பது தொழிற்சாலைகளோடு, தொழிலாளாகளோடு பின்னிப் பிணைந்த ஒன்றாக இருந்தது. ஆனால், இன்று... நாடு, நகரம், பட்டி. தொட்டி என்று எங்கும் பரவி விரவி விட்டது. மக்கள் தொகைக்கும், ஒலியின் சராசரி செறிவுக்கும் உள்ள தொடர்பை டாக்ஃகென்விங் இவான் கியர்க் (Dr. Henning Dierk) என்பவர் வரையறுத்துள்ளார். இதன்படி ஒரு சதுர மைலுக்கு 10,000 பேர்கள் மக்கட்தொகை கொண்ட இடத்தின் ஒலி ஏற்ப்புத்திறனின் அளவு 52dB ஆகும். இந்த 52 டெசிபெல் ஒலிச்செறிவு, இரவு பகல் இரண்டு பொதுக்குமே உரிய அளவாகும். மக்கட் தொகை ஒரு மில்லியனாக மாறினால் ஒலிச்செறிவு 72 டெசிபெல் ஆகிவிடும். அதன்படி, நகரியங்களே ஒலி மாசை உண்டாக்கும் மையங்களாக பெரிதும் மாறிவிடுகின்றன.

தொழிற்சாலைகளினால் உண்டாகும் பேரிரைச்சல் மட்டுமல்ல, அன்றாடம் போக்குவரத்து சாதனங்கள் ஏற்படுத்தும் ஒலிக்கேடுகளும், மனித இனத்தைப் பெரிதும் பாடு படுத்தி வருகின்றன. எடுத்துக்கம்ட்டாக உயர் ஒலி மிஞ்சும் விமான்ம் (Jet plane) கிளம்புகையில் 140 டெசிபெல் ஒலிச்செறிவை உண்டாக்குகிறது. நம்முடைய செவிகள் ஏற்கக்கூடிய 60

டெசிபெல் ஒலிச்செறிவை விட, விமானத்தால் ஏற்படும் ஒலி மாசு இரண்டு மடங்கு அல்லவா ?

பன்னாட்டு ஆகாய போக்குவரத்து நிறுவனங்கள் (International Civial Auiation Organisation), பொளாதாரக் கூட்டுறவு வளர்ச்சிக்கான நிறுவனம் (Orgenistion for Econmic Cooberation and Development), உலக நல்வாழ்வு நிறுவனம் VHO ஆகியவை ஒலி மாசை ஏற்படுத்தும் இடங்கள், கட்டுப் படுத்தும் முறைகள், நீக்கும் வழிகள் பற்றி ஆய்வுகள் நடத்தின. ஒலி மாசுகளைத் தவிர்க்க சட்டப்படி நடவடிக்கைகளையும் எடுத்துக்கூறியுள்ளன.

ஓசைக்கேடு (Noise Pollutant) உலகந்தழுவிய பாடு ஆகி விட்டது. (Ctobal Problem) பேரிரைச்சலால் ஏற்படும் விளைவு களுக்கு இந்தியத் துணைக்கண்டமும் விதிவிலக்கன்று.

இந்தியப் பெரு நகரங்களில், போக்குவரத்துகளால் ஏற்படும் பேரிரைச்சலை, தேசீய இயற்பியல் ஆய்வு நிறுவனம் (National Physial Lab) ஆய்வுகள் மூலம் அளவீடு செய்தது. அதன்படி, பம்பாய், டெல்லி, சென்னை போன்ற நகரங்களின் பகல்நேர ஒலிச்செறிவு 90 டெசிபல், என்றும் 60 டெசிபலுக்கு அது குறையவே இல்லை என்றும், 6,50,000 க்கும் மேற்பட்ட போக்குவரத்து வாகனங்களின் பேரிச்சலால் பாதிக்கப்பட்ட நகரம் 'பம்பாய்'தான் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பம்பாய் விமானநிலைய ஒலிச்செறிவு 105 டெசிபெல் என காணப்பட்டுள்ளது.

போக்குவரத்து வாகனங்கள் மட்டுமன்று. அரசியல், சமுதாய, மத விழாக்களும் ஒலி பெருக்கிகள் (Loud Speekers) பதிவு நாடாக்கள் (Tape Recorders), மேடை அலறல்கள் மூலமாக பேரிரைச்சலை உண்டாக்கி சுற்றாடல் களங்கத்தை (Environmental pollution) ஏற்படுத்துகின்றன.

தொழிற்சாலை பேரிச்சலால் கேட்கும் திறன் பெரிதும் பாழ் பட்டு விடுகிறது என்பது பழைய தெரிவு ஆகும். அதுமட்டுமா? பேரிரைச்சலால் மாசு, உளவியல், உயிரியல், உடலியல் விளைவு களை உண்டாக்கி விடுகிறது. பரந்துபட்ட நேர்முக, மறைமுக, தற்காலிக, நிரந்தர விபரீதமான விளைவுகளாக, ஒலிமாசு விளைவுகள் உள்ளன.

பேரிரைச்சல் நகரியச் சூழலில் வாழ்வோர், ஒலி அதிர்வு, செறிவைப்பொறுத்து செவி கேளா மந்த நிலையை அடைந்து விடுகின்றனர். அல்லது நிரந்தரமாக செவிட்டுத்தன்மைக்கு ஆளாகி விடுகின்றனர்.

நெஞ்சு படபடத்தல், வேகமாக இதயம் இயங்குதல், இவை யாவும் தொடர்ந்து வரும் ஒலி மாசால் ஏற்படும் விளைவுகள். இதனால் உயர் இரத்த அழுத்தம் உண்டாகிறது. எனவே, ஓசை இரத்த ஓட்ட, இதயப் பாடுகளை (Problems) ஏற்படுத்தி விடுகிறது. இவை மட்டுமா? குடல் அழற்சி, நரம்புத்தளர்ச்சி, ஒவ்வாமை இசை யாவும் ஓசையினால் ஏற்படும் கேடுகளே!

எலிகளை வைத்து ஆய்வுகள் நடத்திப் பார்க்கையில் பலட்டுடு தன்மை, முறை கேடான நடவடிக்கை யாவும், ஒலி மாசாய் ஏற்படுகின்றன என தெரிவு செய்யப்பட்டது.

தேவையில்லாத ஓசை தூக்கமின்மை, மனத் தளர்வு, விளங்காத் தன்மை எரிச்சல் இவற்றையும் ஏற்படுத்துகின்றன. சில சமயங்களில் தொடர்ந்து ஏற்படும் மன உளைச்சலால் மனநிலை தடுமாற்றம், மனநலக்குறைவு' தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் யாவும் ஒலி மாசால் உண்டாகும் விளைவுகளே!

ஒலி மாசைக் கட்டுப்படுத்த இயலுமா :

தென்னிசை, ஏத்தொலி, கூத்தொலி, யாழிசை, வண்டினங்களின் ரீங்காரம், குழலிசை, மழலை மொழி இசை யாவும் இனியவை ஏற்கக் கூடியவை. கூச்சல், பெருங்கூச்சல், இரைச்சல், பேரிரைச்சல், ஓசை, இவை தவிர்க்கப்பட வேண்டியவை. எந்திரங்களில் சிறு மாற்றங்கள் செய்வதாலும் 70 பங்கு ஒலி மாசை தவிர்க்கமுடியும். இருப்பினும், வளிமாசு, நீர்மாசு, திண்ம மாசு இவற்றைவிட ஒலிமாசு பற்றி அதிக கவனம் செலுத்தப்படவில்லை. நகரியங்களில் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒலி மாசின் விளைவுகள் இரு மடங்காகி வருகின்றன.

தொழில் நுட்பவியல் முறையில் மூன்று வழிகளில் ஒலியைக் கட்டுப்படுத்த இயலும். 1. ஒலி தோன்றுமிடத்தை ஒழுங்கு படுத்துவது 2. வழியில் இடைமறிப்பது 3. கேட்போரை பாதுகாப்பது. ஓசையைக் குறைக்கவும் கட்டுப்படுத்தவும், பல சட்டங்களை, தொழில் துறையில் முன்னேறிய நாடுகள் இயற்றியுள்ளன. 1955 ல், 'ஒலிக்கட்டுப்பாட்டு சட்டம்' என்பதை

(Noise Control Act) அமெரிக்க ஒன்றியம் நடைமுறைக்குக் கொணர்ந்தது. அதன்படி 'சுற்றாமல் பாதுகாப்பு முகவாண்மை (EPA) (Enviromental Production Agency) என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. 'ஏற்கக்கூடிய ஒலியின் அளவு (Permissible levels of voise) ஓசைப்படுத்தலின் தராதரம் (Noise commission standard) ஆகியவை வரையறுக்கப்பட்டன. சட்டத்தை மீறுவோர்க்கு அதற்குரிய தண்டனைகளும் விதிக்கப் பட்டன.

அதே போன்று இந்தியாவிலும் சட்டவடிவங்கள் நடைமுறைக்குக் கொணர வேண்டும். ஓசைக் கேட்டினால் ஏற்படும் விளைவுகளை நாம் இன்னமும் உணரவில்லை; அல்லது அதை ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை நரம்பைச் சுண்டியிழுக்கும் காற்று ஒலிப்பான் (Air-Horn), வரம்பு மீறி வைக்கப்படும் நாடா ஒலிப்பான்கள் (Tap Record Players) ஒலியமுக்கிகள் (Silencer) இல்லாத போக்கு வரத்து சாதனங்கள் ஒலி இவற்றிலே, இன்னமும் நாம் இனிமையும் புளகாங்கிதமும் அடைந்து வருகிறோம்.

1.	உணரக்கூடிய அல்லது கேட்கக் கூடிய ஓசை (Avdible)	1 – 10	டெசிபெல்
2	மிக அமைதியான ஒலி (Very quiet)	10 – 30	,,
3	அமைதியான ஒலி (quiet)	30 – 70	,,
4.	சாதாரண ஒலி (Moderately loud)	50 – 70	,,
5.	அதிக ஒலி Very loud)	75 – 100	,,
6.	தாங்க இயலா ஒலி (Uncomfortably loud)	100 – 120	,,

என சுற்றுப்புற ஓசையின் அளவு குறிக்கப்பட்டுள்ளது. ஓசையில்லாத இரைச்சல் இல்லாத வாழ்வே பெருவாழ்வு என்பதால் மௌனமும் மோனமும் பெரிதும் ஏற்கக் கூடியவை என்றாலும் வளர்ந்து வரும் அறிவியல் தொழில் நுட்ப யுகத்தில் மௌனத்தையும், மோனத்தையும் கடைப்பிடிக்கத் தடைகளும் உள்ளன, என்பது உண்மைதான்!

அறுவகை இலக்கணத்தில் எழுத்திலக்கணக் கோட்பாடுகள்

• டாக்டர் சா. கிருட்டிணமூர்த்தி
விரிவுரையாளர்
அறிவியல் தமிழ்த் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005

இலக்கணம் என்பது மொழியின் பல்வேறு அமைப்பு நிலைகளை விளக்கி நிற்பது. கால, கருத்து வளர்ச்சிகளுக்கேற்ப அந்நிலைகள் மாறுபடும்பொழுது அவற்றிற்கேற்பப் புது இலக்கண நூல்கள் தோன்றக்கூடும். தொல்காப்பியம் தொடங்கி இன்று வரையுள்ள இலக்கண நூல்கள் அவ்வக்காலத்து மொழி நிலையை வெளிப்படுப்பனவாகவே அமையும்; அமைந்திருக்கவும் வேண்டும். அவ்வாறு அமையப்பெறாத நூல்கள் ஏற்றுக் கொள்ளவியலாதவனாக அமைகின்ற தன்மையை நாம் காணவியலும்.

இலக்கணத் தேய்வும் வளர்ச்சியும்

தொல்காப்பியர் கால இலக்கண வழக்குகள் அதற்குப் பிந்திய காலத்தில் மறைந்து போயிருக்கின்றன; புதிய வழக்குகள் தோன்றியும் இருக்கின்றன. இதனைப் பின்வந்த நூலாசிரியரும் உரையாசிரியரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இலக்கணத்தேய்வும் வளர்ச்சியும் மொழிக்குரியனவாதலால் அவற்றை அவர்கள் வெளிப்படுத்தத் தவறவில்லை. "ஒரு காலத்து வழங்கிய சொற்களும் பொருள்களும் அணிகளும் கோலமும் முதலியன ஒரு காலத்து வழங்காதனவுமுள ஓரிடத்து நிகழும் பொருள் மற்றோரிடத்து நிகழாதனவுமுள அக்காலமும் இடமும் பற்றி ஏற்றவாற்றாற் செய்யுள் முடிக்க" (நச் தொல். செய் 80) என்று வழக்குகள் மாறுதலையும் புதியனவற்றை ஏற்றுக் கொள்ளுதலையும் நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார்.

"சுட்டுச்சினை நீடிய ஐகாரவீற்றுப் பெயர் உறழ்ந்து முடிக என்றான் ஆசிரியன்; அக்காலத்து அவை உண்மையான்; இப்பொழுது அவற்றிற்கு உதாரணமில்லை" என்று இளம்பூரணரும் (சொல். 446) அதோளி இதோளி உதோளி போல்வன இடைச்சங்கத்திற்கு ஆகாவாயின" என்று நச்சினார்க்கினியரும் (செய்யுளியல் 80) கூறுவர் இவை வழக்கொழிந்த சொற்

களாதலால் பின்வந்த இலக்கண நூல்களும் இவற்றிற்கு இலக்கணம் கூறாமல் விடுத்தன. முத்துவீரியம் மட்டும்,

“இகரச் சுட்டு மைகா னிறுதியும்
மிகுதலும் உறழ்தலும் உளவென மொழிப” (199)

என்று அச்சொற்களுக்கு இலக்கணம் கூறுகின்றது. இறந்த வழக்கிற்கு இலக்கணம் கூறும் இந்நூல் ஒரு நூலைப் படைக்க வேண்டும் என்ற அவாவில் படைக்கப் பட்டதேயன்றிப் பிறிதில்லை. அதுபோன்று தொல்காப்பியத்துள் சொல்லப்பட்ட செய்ம்மன என்னும் எதிர்கால விரவு வினைமுற்றுச் சொல்லும் பிற்காலத்து வழக்கொழிந்தது என்பதை அறிய முடிகின்றது. இளம்பூரணர் காலத்திலேயே இச்சொல் வழக்கொழிந்தது என்பதைச் “செய்ம்மன என்பது இப்பொழுது வழக்கரிது” (சொல். 217) என்ற அவரது உரையால் அறியலாம். எனவே தான் ஏனைய இலக்கண நூல்கள் (இலக்கண விளக்கம், முத்துவீரியம் நீங்கலாக) இதற்கு இலக்கணம் கூறாமல் விடுத்தன. இவ்வாறாக இறந்தனவற்றை நீக்கி வருவனவற்றை ஏற்றுப் படைக்கப்படுகின்ற இலக்கண நூல்கள் அவ்வக்காலத்து மொழிநிலையை அறியப் பெரிதும் துணைபுரிவனவாக அமையும். இவ்வகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மலர்ந்ததாகிய ‘அறுவகை இலக்கணம்’ அந்நூற்றாண்டின் மொழி நிலையை அறியத் துணைநிற்கும் ஏற்புடைய நூலாகத் திகழ்கின்றது.

இலக்கண அமைப்பில் மாற்றம்

பண்டைத் தமிழிலக்கண அமைப்பு முறை எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பாகுபாட்டையுடையது. ‘எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி’ என்பது தொல்காப்பியப் பாயிரம். இம்மூன்றிலக்கண அமைப்பு, தொல்காப்பியருக்குப் பின் மாற்றம் பெற்று எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐந்திலக்கணமாக வளர்நிலையடைந்தது.

“தமிழ்நூ லஞ்சுக் கிலக்கியம் ஆரண சாரம்” (தனியன்)
என்றும்,
“கரைபெற்ற தோர்பஞ்ச லட்சண மான
தொல்காப்பியமும்” (பெருந்தொகை 1555)
“திருமருவு பஞ்சலக்கண வோலை”
(பெருந்தொகை 1562)
“கணிகொண்ட பஞ்சலட் சணமும்” (பெருந்தொகை 1765)

என்றும் ஐந்திலக்கண நெறி சுட்டப்பட்டுள்ள தன்மையைக் காணலாம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திருவிடைமருதூர்க் கலம்பகம் ஓர் ஆய்வு

இரா. சுந்தரமூர்த்தி, எம். ஏ., எம்.ஃபில்.
முதுநிலை விரிவுரையாளர்,
த. உ. க. கலைக்கல்லூரி,
தஞ்சாவூர் - 2.

சைவசித்தாந்தக் கருத்துக்கள் :

" நீல மேனி வாலிழை பாகத்
தொருவ னிருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே " 1

என்று பாரதம் பாடிய பெருந்தேவனார் சிவனாரின் திருவடியருள் நிலையைச் சிறப்பித்துப் போற்றுகின்ற பாங்கினால் தமிழகத்தில் சைவநெறிச் சிந்தனை பரவியிருந்த பெற்றியையறியலாம். சைவ சமயம் எழுச்சி பெற்றிருந்த காலத்தில் தோன்றிய பன்னிரு திருமுறைகளில் சித்தாந்தக் கருத்துக்களைக் காணலாம். சைவக் காப்பியமாம் பெரியபுராணம்சித்தாந்த நெறியைப் பெரிதும் போற்றுகின்றது. சிற்றிலக்கியப் புலவர்கள் சித்தாந்தக் கருத்துக் களைச் சிறப்புடன் எடுத்தாண்டுள்ளனர். திருவிடைமருதூர்க் கலம்பகத்தில் கூறப்பட்ட இறையியல்பு, தொழில்கள், பசுவியல்பு, மூவாசைநீக்கம், பிறவித்துன்பம், திருவைந்தெழுத்து ஞானநிலை, திருவடிப்பேரின்பம் ஆகியவற்றைப் பற்றி இவ்வியல் கூறும்.

எண்குணங்கள் :

" தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை
யுணர்வினனாதல்,
முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல்,
பேரருளுடைமை
முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை, என
விவை; இவ்வாறு
சைவாகமத்துக் கூறப்பட்டது " 2

என்று திருக்குறள் உரையில் பரிமேலழகர் கூறுவார். இத்தகு குணங்கள் திருவிடைமருதூர்ச் சிவபெருமானின் இறையியல்பு களாய் அமைந்துள்ளமையை நூலாசிரியர் பலவாற்றானும் போற்றுகின்றார்.

அகரம் :

" அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு "[3]

என்று திருவள்ளுவர் இறைவனின் முதன்மையைத் தெளிவு படுத்தியுள்ளார். அகரம், எழுத்துக்களுக்கெல்லாம் தலைமை யாகச் சிறந்து விளங்குகின்றது. அகரம் போல் இறைவனும் உலகங்களுக்கு முதல்வனாக விளங்குகின்றான் என்பதே இத்திருக்குறளின் விளக்கம். இக்கருத்தை

" அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரல் இறைநிற்கும் நிறைந்து "[4]

என்று திருவருட்பயனில் கொற்றவன் குடி உமாபதி தேவ நாயனார் கூறுயுள்ளார். அகரத் தலைமைக் கருத்தைக்

" கருத வனத்தானும் "[5]
(கருது அவனத்தானும்)
" ஆரணம் பராவு மகார வாச்சிய "[6]

என்று திருவிடைமருதூர்க் கலம்பகப் பாடலடிகள் குறிப்பிடு கின்றன. "' அ ' வனத்தான் " (எழுத்து) என்றும் " அகார வாச்சிய " என்னும் கூறப்படுவனவற்றைக்கொண்டு சிவனாரின் தலைமைச் சிறப்பையறிலாம்.

பதிமுதுநிலை :

இறையியல்பு :

" மேதகு மருதவனப் பெருமானார் "[7]
" ஈரிரு முகன்மாற் கெட்டாச் சோதிய "[8]
" தேடரிய மூர்த்தி "[9]
" ஒப்புயர் வில்லா தோங்கும் பரம "[10]
" அமரருக்கிறைவன் "[11]
" குறைவி லா தவர் மருதநாயகர் "[12]
ஆதார மாகி யனைத்துமரு ணன்மருதூர்ப்
பூதாதி நாயகனைப் புகழ்மினோ[13]

என்று திருவிடைமருதூர்க் கலம்பக நூலாசிரியர் போற்றுகின்றார். இவ்வடிகளில் சிவனாரின் பரத்துவம், சோதி வடிவம், இன்ற நிலை, குறையின்மை பூதாதிநாயக நிலை ஆகியன குறிக்கப் பெறுகின்றன.

மறையவன் :

சிவனார் மறைகளையருளினார் என்பதை
" அருமறைக் குரியை நீ " [14]
" சுருதி சொற்றனை " [15]
" ஆரணமுந் தொழு மருதூர்ப் பெருமான் " [16]
அனக புராதன வாரண விசேட " [17]
என்று நூலாசிரியர் இராமசாமிச் செட்டியார் போற்றுகின்றார்.

முதல்வன் :

" சகல தேவர்கட்கும் முதல்வனாதலின்,
சிவம் முதுபதி எனப்பட்டதென்க " [18]

இம்முதுபதிநிலையை,

" முதல்வனார் மூவா முதல்வனார் யார்க்கு
முதல்வனார் தென்மருதூர் மூர்த்தி—எதனால்
பிறப்பிறப் பில்லாப் பிரானாதல் பற்றி
உறப்பா ருரைப்பதுமா னும் " [19]

என நூலாசிரியர் தெளிவுறுத்துகின்றார். இம்முதன்மைத்தன்டையில் உயிர்களுக்குத் தலைவன் என்ற நிலையில் பசுபதித் திருநாமமும் பெறுகின்றார்.

" ... பசுபதியாங்
குலகூற் பகம்வாழ் மருதூர் " [20]
" பசுபதி யாமே " [21]

என்ற நூலாசிரியர் பசுபதிநிலை போற்றுகின்றார்.

தூயநிலை :

சிவனாரின் தூயநிலையைப்
" புங்கவர் சிகாமணியைப் புகழ்மினோ
பொய்யா மணி விளக்கைப் புகழ்மினோ " [22]
" புலியத ளுடுத்த புங்கவ புனித " [23]
" மாற்றுயர்ந்த பொன்னே மருத நகர்க்கிறையே
போற்றவறு மெய்ஞ்ஞான பூரணமே — சாற்றரிய
வித்தகமே யோக விளக்கேயென் பாரிடத்து
மெத்தவும்வைப் பாய்பிரிய மே " [24]

எனவரும் பாடலடிகள் சிவனாரின் தூயநிலைகளைக் கூறு கின்றன. இப்பகுதியில் சிவனாரைப் புங்கவர் (தூயவர்), பொய்யாமணி விளக்கு, புனிதன், பொன்னன், மெய்ஞ்ஞான பூரணம், யோகவிளக்கு என்று போற்றுவதையறியலாம். எக்காலத்தும் தூய்மை மாறாத சிவபரம்பொருளே மாசுபடும் உலக உயிர்களைக் கருணையினால் காத்தாண்டு அவை உய்யுந் தூய்மையளிக்கும் என்னும் தன்மை இதனால் விளக்கப்படுகின்றது.

பேரருள் உடைமை :

சிவனாரின் பேரருளுடைமையை,

" அருணி றைத்தனை " 25

" திருவ ருட்கு ரவனீ " 26

" கொடையினி லிசைபெறு குணமுள மகிமையை " 27

" வற்றாப் பெருங்கருணைக்கட லாஞ்சீர் மனுமருதர் " 28

" தால மகிழ்ந்திட வருள்செயுர்
தண்மரு தூருறை நாதனார்
சீல மிகும்புகழ் பாடியே
திகழுங் குரவைக ளாடிரோ " 29

" அருள்பொழி நயனத் தற்புத நாயக " 30

" எண்டிசை யோர்நித மேந்துந் தயாபர " 31

என்று திருவிடைமருதூர்க் கலம்பகப் பாடலடிகள் பகர்கின்றன. இப்பகுதியில் வரும்

" மனு — மந்திரம்
சீர்மனு என்றது திருவைந்தெழுத்தை "

என்பதற்குப் பொருள் கூறுவார் குறிப்புரையாசிரியர். 32

" சீலம் — அடியார்க்கு எளியராயிருக்கும் தன்மை " 33

எனக் குறிப்புரையாசிரியர் குறிப்பிடுகின்றார். அன்புடை மெய்யன்பர்க்குச் சிவனார் நல்லருளுண்டாம் என்பது விளக்கப் பெற்றது. அருள்நிறைந்தவராகவும், கொடையுளராகவும் சிவனார் சிறந்து விளங்குகின்றார் என்பதனையறியலாம்.

வரம்பிலின்பமுடைமை :

சிவனாரின் வரம்பிலின்பமுடைமையைச்

" செகமு வப்ப வனுநீ " 34

" சுகம்வி ளைத்தனை " 35

" ஊனமொன் றறியா தொளிர்பரா னந்த " 36

" ஐயா னனம்பெறு மானந்த மூர்த்தி " 37

என்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். சத்சித் ஆனந்தம் என்னும் முப்பெருந் தன்மைகளில் ஒன்றான ஆனந்தம் என்பது இப்பகுதியால் உணர்த்தப்படுகின்றது.

தொழில்கள் :

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியவை சிவனின் தொழில்களாம். உலக உயிர்களையாடச் செய்தல், அசையச் செய்தல், அன்பர் உள்ளத்தில் சார்தல் செழிக்கச்செய்தல், கடவுளன்பர்க்கு அருளல் நிலைக்கச்செய்தல், பாடச்செய்தல் ஆகியவற்றை

> " ஆடச்செய் வானு மசையச்செய் வானுமெய் யன்புளத்திற்
> கூடச்செய் வானுங் கொழிக்கச்செய் வானுங்கை கூப்புநரை
> நீடச்செய் வானு நிலைக்கச்செய் வானுநா நின்றுதனை
> பாடச்செய் வானு மிடைமரு தூரிற்க பாலன்றே "[38]

என்று நூலாசிரியர் பாடுகின்றார். ஐந்து தொழில்களை நடத்தியருளுவதில் சிவன் சிறந்து விளங்குகின்றான். அவன் செயலுக்கேற்ப அனைத்துலகங்களும் படைக்கப்பெறுகின்றன அசையப் பெறுகின்றன. செழிக்கப்பெறுகின்றன. உலகத்தையழித்த பின்பும் ஏம இடுகாட்டில் சேமநடம் பயிலும் செல்வன் சிவனாவான். உலக உயிர்களை இறைவன் இயக்குந்தன்மையை 'ஆடச்செய்வான்' எனக்குறிக்கின்றார். உலக உயிர்கள் தனுகரணபோகங்களைத் துய்க்க நீடச் செய்பவன் சிவன் என்றும் அவ்வுயிர்களை அழிவின்றி நிலைக்கச் செய்பவன் என்றும் காத்தல் தொழிலின் செம்மையைச் செப்புகின்றார்.

ஆன்மா (பசுநிலை)

ஆன்மா தவநெறியில் ஈடுபடவேண்டும். சிவனார் குருவாகத் தோன்றி ஐம்புலவின் பங்களிலிருந்து நீக்கக்காரணராக விளங்கியருளுவார். பின்னர் ஆன்மா சிவனார்க்கு அணுக்கமாகச் செல்லும்.

> " ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
> தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
> டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே "[39]

என்று மெய்கண்டார் மொழிந்தருளுகின்றார்.

அடிக்குறிப்புக்கள்

1. ஐங்குறுநூறு, கடவுள் வாழ்த்து.
2. பரிமேலழகர் (உ. ஆ.), திருக்குறள், ப.6.

3. குறள். 1.
4. உமா பதிதேவ நாயனார், கொற்றவன்குடி, திருவாட்பயன், செய். 1.
5. திரு. ம. கலம்., பா. 68.
6. மேற்படி., பா 67.
7. மேற்படி., பா. 41.
8. மேற்படி., பா. 42.
9. மேற்படி., பா, 92.
10 மேற்படி., பா 67.
11. மேற்படி., பா. 1
12. மேற்படி. பா., 43.
13 மேற்படி., பா. 88,
14. மேற்படி., பா 1.
15. மேற்படி., பா. 1.
16. மேற்படி., பா. 60.
17. மேறபடி , பா 1.
18. தே. ஆ சீனிவாசசாரியன் (உ ஆ), திருவருட்பயன் நூலின் தெரிவுக்கட்டுரை, ப. 15.
19. திரு. ம. கலம்., பா. 93.
20. மேற்படி , பா. 40
21. மேற்படி , பா 65.
22. மேற்படி., பா. 88.
23. மேற்படி., பா. 1.
24. திரு. ம கலம் , பா. 37.
25. மேற்படி., பா. 1.
26. மேற்படி., பா. 1.
27. மேற்படி., பா. 1.
28. மேற்படி., பா. 62.
29. மேற் டி , பா 81.
30. மேற்படி , பா. 67.
31. மேற்படி., 67.
32. த. ச. மீனாட்சி சுந்தரம்பிள்ளை (கு.ஆ.), திரு ம கலம்., பா. 62. குறிப்புரை.
33. மேற்படி., பா. 81. குறிப்புரை.
34. திரு ம கலம்., பா 1.
35. மேற்படி., பா. 1.
36. மேற்படி., பா. 67.
37. மேற்படி., பா. 67.
38, மேற்படி., பா. 13.
39. மெய்கண்டார், சிவஞானபோதம், சூத்திரம். 3.

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ. 50	00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ. 30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ. 6	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ. 6	00
கபிலர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ. 4	00
நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ. 3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ. 2	00
கவியரசு நினைவு மலர்	ரூ. 1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ. 0	75

பிற வெளியீடுகள்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

எழுத்ததிகாரம்	ரூ. 40	00
சொல்லதிகாரம்	ரூ. 45	00
கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]	ரூ. 7	50
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ. 4	50

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No. TN/TJ/24

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு நூலகர் அவர்கள்
அரசினர் கீழ்த்திசைச்
சுவடிகள் நூலகம்
சென்னை.
600005.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுவோர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837 / 1, மேலராஜ வீதி,
தஞ்சாவூர் - 613 009.